Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-28 | 13-08-2005 | சனிக்கிழமை | ஓசை-176


S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12426)

# கதிர்காமர் சுட்டுக்கொலை!



(கொழும்பு)

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்றிரவு கொழும்பில் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரியால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தான் எழுதிய புத்தகம் ஒன்றின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டுவிட்டு இரவு 10.30 மணியளவில் திரும்பிய அமைச்சர் நீச்சல் தடாகத்தில் குளித்துவிட்டு வீடு நோக்கி நடந்து செல்கையில் மூன்று தடவைகள் சுடப்பட்டார். இதன்போது தலையிலும், கழுத்திலும், நெஞ்சிலும் குண்டுகள் பாய்ந்து ஆபத்தான நிலையில் இருந்த அமைச்சர் கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு பல வைத்திய நிபுணர்கள் சத்திர சிகிச்சையை மேற்கொண்டபோதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் இரவு 11.45 மணியளவில் உயிரிழந்தார்.

கொழும்பு அதியுயர் பாதுகாப்பு வலயமான விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வமற்ற தனியார் வாசஸ் தலத்தில் வைத்து இவரைச் சுடுவதற்கு ஆயுததாரிகள் தூரத்திலிருந்து குறிபார்த்துச் சுடும் துப்பாக்கியை (சினைப்பர்) பயன்படுத்தியுள்ளதாக சிறிலங்காப் பொலிஸ் அதிகாரி எச்.ஏ.கேமபால தெரிவித்துள்ளார்.

## உலங்குவானூர்தியின் உதவியுடன் படையினர் பாரிய தேடுதல் வேட்டை

(கொழும்பு)

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா முப்படைகளும் இணைந்து பாரிய தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

இத்தேடுதல் வேட்டையில் உலங்குவானூர்திகள் பயன்படுத்தப்படுவதாகவும், வெளிச்சக் குண்டுகளும் வானில் ஏவப்பட்டுத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேடுதல் நடவடிக்கையைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கடற்படையிலிருந்து தலைமறைவான இருவர் மீது துப்பாக்கிச் சூடு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மல்லிகைத்தீவு சந்தியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றில் இருவர் காயமடைந்து குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே கடற்படையிலிருந்து தலைமறைவாகியவர் எனக் கருதப்படும் எம்.ஜி.ரோகித மற்றும் என்.ஜி.குமார் ஆகியோரே காயமடைந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உந்துருளியில் சென்ற இரண்டு இளைஞர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சிறிலங்கா முப்படையினரும் இணைந்து திருமலையில் நடாத்திய திடீர் போர் ஒத்திகை

### மக்கள் மத்தியில் எழுந்த பதற்றம்

(திருகோணமலை)

திருமலையில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கும் 4.30 மணிக்கும் இடையில் துறைமுக அதிகார சபையின் இறங்குதுறை,அஷ்ரப் இறங்குதுறை, பிரிமா இறங்குதுறை, இந்தியன் ஒயில் கம்பனியின் இறங்குதுறை ஆகிய துறைகளில் நேற்று பாரிய இராணுவ ஒத்திகை ஒன்று சிறிலங்காவின் முப்படைகளாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியன் ஒயில் கம்பனியின் இறங்குதுறையில் தாக்குதல்களின் போது தீ விபத்து ஏற்பட்டால் அதை எவ்வாறு அழிவில்லாமல் வெற்றிகரமாகத் தடுப்பது, இத் துறைமுகங்களிலும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் தாக்குதல் சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றால் அவற்றை எவ்வாறு வெற்றிகரமாக முறியடிப் (12ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சியின் கொட்டாஞ்சேனை அமைப்பாளர் நேற்றுக் கொழும்பில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்று ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கொட்டாஞ்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் காலை 8.30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்ட இவர் கொட்டாஞ்சேனைப் பகுதியின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளரும் அமைச்சர் ஒருவரின் உதவியாளராகச் செயற்பட்டவருமான வர்ணகாந் சமரசிங்க என அடையாளம் காணப்பட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோரின் தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் பலி

அம்பாறை மாவட்டம் தெகியத்தை கண்டியவில் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாத நபர்கள் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மற்றுமொரு சம்பவத்தில் ஊர்காவல் படைவீரரொருவர் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகளை நிறுத்துமாறு இருதரப்பையும் கோருவோம்

### போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர்

இரு தரப்பினரையும் தனித்தனியாக சந்தித்து படுகொலைகளை நிறுத்துவதற்கு முயல்கின்றோம் என இளந்திரையனுடனான சந்திப்பையடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் சமாதான நடவடிக்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதனால், இருதரப்பினரையும் தனித்தனியாக சந்தித்துப் படுகொலைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கையில் கண்காணிப்புக்குழு ஈடுபட்டுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

கிழக்கிற்கு விஜயம் செய்துள்ள கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்ட் நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளந்திரையன் தலைமையிலான குழுவினரை சந்தித்துப் பேசினார். கொக்கட்டிச் சோலையிலுள்ள விடுதலைப்புலிகளின் மாவட்ட செயலகத்தில் இச்சந்திப்பு முற்பகல் 10 மணி முதல் 12 மணி வரை நடைபெற்றது. சந்திப்பையடுத்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே ஹக்ரப் ஹொக்லண்ட் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கண்காணிப்புக் குழுவின் சார்பில் ஹொக்லண்டுடன் (12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் நீர்த்தாங்கி மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

### மூன்று விசேட அதிரடிப்படையினர் காயம்

விசேட அதிரடிப்படைக்குச் சொந்தமான நீர்த்தாங்கிமீது இனந் தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் பொத்துவில் சங்கமாம் கண்டியில் இடம்பெற்றுள்ளது. இதில் மூன்று விசேட அதிரடிப்படையினர் சிறுகாயங்களிற்குட்பட்டதுடன் வாகனமும் சேதமடைந்துள்ளது. இச்சம்பவம் தாண்டியடிக்கும் கோமாரிக்கும் இடையில் அக்கரைப்பற்று 212 ஆம் கட்டையடியில் இடம்பெற்றுள்ளது. சங்கமாம்கண்டி அம்பாறை மாவட்டத் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இராசரத்தினம் அமிர்தலிங்கம் 21, கரம்பைக்காடு வவுனியா இவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி யிலுள்ள ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (சி.12515)

### தவறவிடப்பட்டுள்ளது

சகிலா வேதாரணியம் என்பவருடைய நிரந்தரபயண அனுமதி சீட்டை, தேசிய அடையாள அட்டை, (இல 838602053 v) மற்றும் இரண்டு படங்களுடன் கச்சேரிக்கு அருகாமையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தமிழரசி நகை மாடம், கிளிநொச்சி என்ற முகவரியல் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (6538)

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு கைவேலியில் இரண்டு ஏக்கர் உறுதிக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நவரட்ணம் (அண்ணாவி) கைவேலி. (காலை 7.30 மணிக்கு முன்)(6537)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

MS Office, Desktop Publishing (D.T.P), Hardware 13-08-2005 சனிக்கிழமை K.S.K. கணினி நிலையம் புதுக்குடியிருப்பில் ஆரம்பம். பிரிவு Iமாலை 3.00 மணிக்கு, பிரிவு II இரவு 7.00 மணிக்கு. அனுமதிக் கட்டணங்கள் இலவசம். பயிற்சி முடிவில் அரச, சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். நிர்வாகி. (6120)

### கடல்வள மாணவர் கவனத்திற்கு

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடல்வளம் கற்ற நான்காம் அணி மாணவர்களில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்ற முடியாதவர்கள், தங்களது பட்டச் சான்றிதழ் ஆசிரிய நேர்முகத் தேர்வுக் கடிதம் ஆகியவற்றின் நிழற்பிரதிகளை கடல் வள அபிவிருத்தி நிலையத்தில் திங்கட்கிழமைக்கு முன் ஒப் படைக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். (28)

## உடையார்கட்டு ம.வி யில் முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்வு

(உடையார்கட்டு)

விசுவமடு பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பிரதேச முன்பள்ளிகளின் தலைவர் சுரேஸ் இந் நிகழ்வு களுக்கு தலைமை தாங்கினார்.

இப் பகுதியிலுள்ள 13 முன்பள்ளிகளின் சிறார்கள் இதில் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.. இந் நிகழ்வை பெருமளவான மக்கள் கண்டுகளித்தனர். (19)

## கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம் உடையார்கட்டில் அமைக்க ஏற்பாடு

(உடையார்கட்டு)

உடையார்கட்டுப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க தெரிவும், கால்நடை வளர்ப்போர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலும் திங்கட்கிழமை காலை.9.00 மணிக்கு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளதாக விசுவமடு பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரம் பகுதிகளைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் தவறாது கலந்துகொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (19)

## விதை உருளைக்கிழங்கை பெற்றுக் கொள்ளலாம்

யாழ். குடாநாட்டில் உருளை கிழங்கு பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் தமக்குத் தேவையான விதை உருளைக் கிழங்குகளை தமது பிரதேசங்களில் உள்ள கமநல சேவை நிலையங்களில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமான விவசாயிகள் உருளைக் கிழங்கு செய்கையை மேற்கொள்ள முன்வந்திருப்பதாக கமநல சேவை நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (28)

## கடனுதவி

(யாழ்ப்பாணம்)

சர்வோதயம் யாழ். மாவட்டத்தில் அங்கவீனராக இருக்கின்றவர்களுக்கு சுயதொழில் மேற்கொள்வதற்காக கடன் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இந்த சுயதொழில் கடன் திட்டத்தில் 50 பயனாளிகள் பயன்பெறவுள்ளனர்.யுத்தத்தினாலும் பிற காரணங்களாலும் யாழ்.மாவட்டத்தில் பலர் அங்கவீனராகி இருக்கின்ற போதிலும், அவ்வாறு இருப்பவர்களிலும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களைத் தெரிவுசெய்து இந்தக் கடனுதவியை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வினை முன்னேற்றமடையச் செய்யலாமென சர்வோதய யாழ். மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

## வைத்திய பரிசோதனை

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனமும் யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்தியர்களும் இணைந்து ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை கர்ப்பவதித் தாய்மார்களின் நலனை முன்னிட்டு வைத்திய பரிசோதனை மேற்கொண்டனர். இதில் 57 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வைத்திய பரிசோதனையும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

## கண்சத்திர சிகிச்சைக்கு பதிவினை மேற்கொள்ளவும்

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் அடுத்தமாதம் இரண்டாம் திகதி கண் சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளதினால் கண்ணில் பூ விழுந்தவர்கள் சத்திர சிகிச்சை செய்வதற்கு ஏதுவாக இம்மாதம் 24 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையிலும் 25 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு கிளிநொச்சி பொன்னம்பலம் மருத்துவமனையிலும் வெளிநோயாளர் பிரிவில் பதிவினை மேற்கொள்ளுமாறு பொன்னம்பலம் மருத்துவமனை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

---

# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

### யாழ். மாநகரசபைப் பிரதேச நீர் பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவத் திட்டம்

### (நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது)

# கேள்வி அறிவித்தல்-இல.04

### சிறுகுளங்களையும் வாய்க்கால் தடுப்புச் சுவர்களையும் புனரமைத்தல்

01. சிறிலங்கா சனநாயக சோசலிச குடியரசின் பொளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்படி திட்டத்திற்கான நிதி இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சிறுகுளங்களையும், வாய்க்கால் தடுப்புச் சுவர்களையும் புனரமைக்கும் வேலைகளுக்காக பகிரங்க கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருனராக குறிப்பிடப்படும் நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் செயலாளருக்காக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் அவர்களால் மூடி பொறி வைக்கப்பட்டகேள்விகள் 'எம்8' இக்ராட் ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன.

03. கேள்விப்பத்திரங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 500/= படி பணமாகச் செலுத்தி 13.08.2005 இல் இருந்து 25-08-2005 பிற்பகல் 15.00 மணிவரை வேலை நேரங்களில் மேற்படி "நீர்ப்பாதுகாப்பு" அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒரு ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது அவர்களால் மேற்கொள்ளும் "நீர்ப்பாதுகாப்பு" வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும். மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளினால் அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தினை கொண்டிருத்தல் ஆகாது.

06.. கடந்த காலங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும். இது தொழில் தருனர்களிடமிருந்து/ அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றும் தரப்படல் வேண்டும்.

07. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பார்வையிட்டு மேலதிக விபரங்களை "நீர்ப்பாதுகாப்பு" அலுவலகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல-021-222 6752.

08. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட எதிரே குறிக்கப்பட்ட தொகைக்கான கேள்விப் பிணைப்பத்திரமும் இணைக்கப்பட்டு." மாவட்ட செயலாள/அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு தனித்தனி உறைகளில் இடப்பட்டு 26.08.2005 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக இரு பிரதிகளாக அனுப்புதல் வேண்டும். இதற்கென அலுவலகத்தில் புனர்வாழ்வுப் பகுதிக் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

09. அதே தினம் 15.00 மணிக்குக் கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

10. கேள்வி கோருவோருக்கு இதன்போது ஏற்படும் செலவுகளுக்குத் தொழில்தருநர் பொறுப்புடையவர் ஆகார்.

### விபர அட்டவணை

| இல | யாழ். மாநகர சபை எல்லையுள் வெள்ள வாய்க்காலின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் கொண்டுள்ள ஆகக் குறைந்த பதிவு | மீளளிக்கக்கூடிய கேள்விப் பத்திர பிணை வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 01. | பறவகுளம் JPO/WC//PO/01/27 | 08 | 28,600.00 |
| 02. | இராஜாவிகுளம் JPO/WC/PO/01/24 | 08 | 14,900.00 |
| 03. | வண்ணான் குளம் (வண்ணார் பண்ணை வடக்கு) JPO/WC/PO/01/28 | 08 | 15,700.00 |
| 04. | தாமரைக்குளம் JPO/WC/PO/01/20 | 08 | 16,600.00 |
| 05. | புறாக்குளம் JPO/WC/PO/01/37 | 08 | 17,500.00 |
| 06. | முதலிக்குளம் JPO/WC/PO/01/09 | 08 | 12 ,900.00 |
| 07. | அஞ்சுதன் குளம் JPO/WC/PO/01/26 | 08 | 21,400.00 |
| 08. | பிள்ளையார் கோவில் குளம் (நீராவியடி) JPO/WC/PO/01/44 | 08 | 12 ,600.00 |
| 09. | நரியன் குண்டுக்குளம் (பகுதிII) JPO/WC/PO/01/43 | 08 | 10,700.00 |

| இல | யாழ். மாநகர சபை எல்லையுள் வாய்க்கால் தடுப்புச்சுவர்களின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் கொண்டுள்ள ஆகக் குறைந்த பதிவு | மீளளிக்கக்கூடிய கேள்விப் பத்திர பிணை வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 01. | கல்லூரி வீதியிலிருந்து கன்னாதிட்டிக் குளம்வரை JPO/WC/CH/1/10 | 08 | 31,400.00 |
| 02. | கன்னாதிட்டிக் குளத்திலிருந்து வண்ணான்குளம் நுழைவாயில்வரை JPO/WC/CH/1/11 | 08 | 30,200.00 |
| 03. | வண்ணான்குளம் வெளிவாயிலிருந்து மின்சார நிலைய வீதிவரையுள்ள பிரதான கால்வாய். JPO/WC/CH/1/12 | 08 | 9,800.00 |

12-08-2005
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம். (சி.12553)

க. கனேஸ்
தலைவர், மாவட்ட கேள்விச்சபை,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.

# ஈராக்கில் சியா முஸ்லிம்கள் தனிமாநிலம் அமைக்க முயற்சி

(பாக்தாத்)

**ஈராக்கின் தென்பகுதிகளில் சியா முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளை ஒருங்கிணைத்து தனிமாநிலம் உருவாக்க வேண்டும் என ஈராக் அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சி ஒன்றும் தீவிரவாத அமைப்பு ஒன்றும் கோரிக்கை விடுத்துள்ளன.**

ஈராக்கில் பாதர்பிரிகேட்ஸ் என்ற தீவிரவாத அமைப்பின் தலைவராக இருப்பவர் ஹாதில் அல்அமிரி. ஈரான் சியா பிரிவு முஸ்லிம் தீவிர வாத இயக்கத்தினிடம் பயிற்சி பெற்றவர். இவர் ஈராக்கின் தென்பகுதியில் உள்ள சியா பிரிவு முஸ்லிம்களின் புனித தலமான நயாப் நகரத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான சியா முஸ்லிம்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

அப்போது ஈராக்கின் அனைத்துப் பகுதிகளிலும் கூட்டாட்சி முறை உருவாக வேண்டும். ஈராக்கில் சியா முஸ்லிம்கள் கூட்டாட்சி முறையை அனுபவிக்க முடியாமல் தடுக்கப்படுகின்றனர்.இதுவரை ஈராக் அரசாங்கத்திடம் இருந்து சாவைத்தவிர வேறு என்ன கிடைத்தது? நமக்கு உரிமைகள் கிடைப்பதற்கு நமது எதிரிகள் தடைகளை ஏற்படுத்தி வருகின்றபோது கூட்டாட்சி உரிமையை நாம் கண்டிப்பாக அடைந்திருக்க வேண்டும் எனவே சியா பிரிவு முஸ்லிம்களுக்கென ஈராக்கின் தென்பகுதியில் சொந்த மாநிலம் உருவாக்க வேண்டும் என வலியுறுத்துவோம் என்றார்.


இந்நிலையில் ஈராக் அரசில் அங்கம் வகிக்கும் சியா பிரிவு முஸ்லிம்களின் முக்கிய கட்சியின் தலைவர் அப்துல் அஜிஸ் அல்ஹக்கீம் கூறுகையில்; கூட்டாட்சியைப் பொறுத்த வரை ஈராக்கின் தென்பகுதியில் சியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளை ஒருங்கிணைத்து ஒரே மாநிலம் உருவாக்குவது அவசியம் என நினைக்கின்றோம் என்றார்.



**சீனாவின் விவசாய பண்ணை ஒன்றில் காய்த்த மிகப் பெரியதான பூசணிக்காயை ஆச்சரியத்துடன் பார்க்கும் சிறுமி. இப் பூசணிக்காய் 100 கிலோவிற்கு அதிகமான நிறை உடையதாகும்.**

## எண்ணெய் கிணறுகளை தனியார் பயன்படுத்தலாம்

-பாக்தாத் முதல்வர்



(பாக்தாத்)

ஈராக் பகுதியில் வருமானங்களைத் தரும் எண்ணெய்க் கிணறுகள் அவர் அவர் சொந்த கட்டுப்பாட்டில் சுதந்திரமாக இயங்கு வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுமென ஈராக்கின் சத்தார் நகரத்தில் நேற்றுமுன்தினம் பிரார்த்தனைக்காக வருகை தந்த அந்நகர முதல்வர் அப்துல் அனின் அல் அக்கிம் தெரிவித்தார்.

ஈரானில் இராணுவ பயிற்சிகளை முடித்துக் கொண்டு ஈராக் வந்துள்ள பதார் இயக்க இராணுவத்தினர் முன்னிலையிலேயே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

## பின்லாந்து உலங்கு வானூர்தி விபத்தில் அதில் பயணம் செய்த 14 பேரும் பலி

(ஹெல்சிங்)

பின்லாந்து நாட்டு உலங்கு வானூர்தி ஒன்று எஸ்டோனியா அருகே கடலில் விழுந்தது. இதில் பயணம் செய்த 14 பேரும் கடலில் மூழ்கி இறந்தனர்.

பின்லாந்து நாட்டு தலைநகர் ஹெல்சிங்கிற்கும் எஸ்டோனியா தலைநகர் டல்லினுக்கும் இடையே வர்த்தக ரீதியிலான பயணிகள் உலங்கு வானூர்தி போக்குவரத்து நடந்து வருகிறது.


12 பயணிகள் இரண்டு சிப்பந்திகளுடன் உலங்குவானூர்தி டல்லின் நகரில் இருந்து ஹெல் சிங்கிக்குப் புறப்பட்டது.

புறப்பட்ட மூன்று நிமிடத்தில், பால்டிக் கடலில் உள்ள நைசார் தீவு அருகே 200 அடி ஆழத்திற்கு கடலில் விழுந்தது.

கடலில் உலங்குவானூர்தி விழுந்ததற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. கடலில் உலங்குவானூர்தி விழுவதற்கு முன்பு இரு முறை பலத்த சத்தம் கேட்டது என்று நைசார் தீவில் உள்ள ரோகுனிமே நகரத்தில் வசிக்கும் ஒருவர் கூறினார்.

மீட்பு உலங்கு வானூர்திகளும், படகுகளும் எஸ்டோனியாவில் இருந்தும், பின்லாந்தில் இருந்தும் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்தன. ஆனால் அங்கு பலத்த காற்று வீசியதாலும், பல அடி உயரத்திற்கு அலைகள் எழுந்ததாலும், மீட்புப் பணிகளைத் தொடர முடியவில்லை. இதனால் மீட்புப் பணிகள் கைவிடப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய "பாபர்" ஏவுகணையை பாகிஸ்தான் பரீட்சித்தது



பாகிஸ்தான் .நேற்று முன்தினம் அணு ஏவுகணையை வெற்றிகரமாக சோதனைசெய்தது. இந்த ஏவுகணையின் பெயர் "பாபர்" ஆகும் இது 500 கிலோமீற்றர் தூரம் வரை பாய்ந்து சென்று இலக்கை அழிக்கும் திறன் வாய்ந்தது.

இது குறித்து பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறுகையில்;எங்கள் நாட்டு விஞ்ஞானிகள் மீண்டும் ஒரு சாதனையைப் படைத்திருக்கின்றனர். அண்டை நாடுகளுடன் ஏற்பட்டுள்ள போட்டியை சமாளிக்க இந்த ஏவுகணைச் சோதனை பயன்பட்டிருக்கிறது என்று கூறினார்.

புதிய ஏவுகணைச் சோதனை பற்றி பாகிஸ்தான் அரசு இந்தியாவுக்கு தகவல் தெரிவிக்கவில்லை. சோதனை நடந்த இடத்தையும் பாகிஸ்தான் அரசு வெளியிடவில்லை.

பாபர் ஏவுகணை இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணைக்கு ஈடானது என்றும், இந்திய நகரங்களைத் தாக்கி அழிக்கும் சக்தி வாய்ந்தது என்றும் கூறப்படுகிறது.

## ஈரானில் கடும் மழை 27 பேர் பலி; 5 பேரைக் காணவில்லை

ஈரானின் வடகிழக்கு மாகாணமான கோலஸ்தானில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்திற்கு 27 பேர் பலியாகினர். ஐந்துபேரைக் காணவில்லை என அந்நாட்டு தொலைக்காட்சி ஒன்று தெரிவித்துள்ளது.

ஈரானின் கோலஸ்தானில் ஒருநாள் இரவு முழுவதும் பெய்த கடும்மழை மற்றும் வெள்ளப்பெருக்கின் காரணமாக பசுக்கள், குளிர் சாதனப் பெட்டிகள், அறுவடை செய்யும் இயந்திரங்கள் என்பவை அடித்துச்செல்லப்பட்டதாக அதனை நேரில் பார்த்த லூயி பிரோஜ் என்ற பெண் கூறினார். உயிருடன் உள்ளவர்களை மீட்பதற்காக உலங்குவானூர்திகள் அனுப்பப்பட்டுள்ளதாக ரெட்கிரசண்ட் அவசர கால பணியாளர்கள் தெரிவித்தனர். மேலும் கடும மழையால் விவசாய நிலங்கள், சாலைகள் மற்றும் கட்டடங்கள் ஆகியவை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஈரானிய வானொலி அறிவித்துள்ளது.

## இப்படியும் ஒரு போராட்டம்

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓவியர் மார்க் மெக்கோவன். கடற்கரை அருகில் கிடக்கும் கூழாங்கற்களை மக்கள் அள்ளிக் கொண்டு போவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கைகளால் நடக்கும் பயணத்தைத் தொடங்கி இருக்கிறார்.

பிரைட்டன் நகரில் இருந்து லண்டன் நகருக்கு கால்களில் கற்களைக் கட்டிக் கொண்டு கைகளால் நடக்கிறார்.

வீட்டுத் தோட்டங்களை அலங்கரிப்பதற்காக கடற்கரைக்கு வரும் மக்கள் கூழாங்கற்களை அள்ளிச் செல்கின்றனர், இதைத் தடுக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் கோரி அவர் இந்தப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்.

## இந்தோனேசிய காட்டுத்தீபுகை மலேசியாவிற்குள் புகுந்தது

அங்கு அவசர காலநிலை அமுல்

மலேசியாவின் முக்கிய நகரங்களில் காட்டுத் தீ புகை சூழ்ந்துள்ளதால் அங்கு அவரச நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கூடங்களுக்கும், அலுவலகங்களுக்கும் விடுமுறை அறி விக்கப்பட்டுள்ளது.


இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா காட்டில் பல வாரங்களாக காட்டுத்தீ எரிந்து வருகிறது. இதனால் 62 மைல் தொலைவில் உள்ள மலேசியாவை புகை மண்டலம் சூழ்ந்துள்ளது. காற்றின் திசை மலேசியாவை நோக்கி வீசுவதால் புகையின் அளவு அபாய அளவை எட்டியுள்ளது. மக்கள் சுவாசிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதால் சிலாங்கோர் மாநிலம் உள்ளிட்ட பகுதிகளில் அவரச நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இங்குள்ள பாடசாலைகளுக்கு ஒருவார காலம் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிறுவனங்களும் அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது. மலேசியாவின் மிகப்பெரிய கிலாங்துறைமுகம் மூடப்பட்டு விட்டது.

மருத்துவமனைகள் மருந்துக்கடைகள், ஆகியவற்றைத் திறந்து வைத்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுமத்ரா கட்டுத் தீயை கட்டுப்படுத்துவதற்காக இந்தோனேசிய வனத்துறை அமைச்சருடன் மலேசிய பிரதமர் அப்துல்லா அகமது பதாவி பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார். செயற்கை மழையை பெய்வித்து காட்டுத் தீயை அணைக்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

புகையை தொடர்ந்து சுவாசித்து வருவதால் மக்கள் பலருக்கு தொண்டையில் கரகரப்பும், தலைவலியும் ஏற்பட்டுள்ளது.

## இஸ்லாம் மதத்தில் சீர்திருத்தம் வேண்டும் என்கிறார் பிரபல நாவலாசிரியர் சல்மான் ருஷ்டி

(லண்டன்)



பழமைவாதத்தைக் கைவிட்டு விட்டு நவீன யுகத்திற்கு ஏற்றால் போல் இஸ்லாமிய மதத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என சர்ச்சைக்குரிய நாவலாசிரியர் சல்மான் ருஷ்டி கூறியுள்ளார்.

இது குறித்து லண்டனில் இருந்து வெளிவரும் டைம்ஸ் பத்திரிகையில் சல்மான் ருஷ்டி எழுதியிருப்பதாவது, இஸ்லாமிய மதத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியம். அந்தச் சீர்திருத்தங்கள் நவீன யுகத்திற்கு தகுந்தது போல இருக்க வேண்டும். அதற்கென தனி இயக்கம் உருவாக வேண்டும்.

அது பழமை வாதத்திற்கு அப்பாற்பட்ட இயக்கமாக மட்டுமல்லாது சீர்திருத்த இயக்கங்களுக்கு சற்றும் குறைவில்லாத இயக்கமாக இருக்க வேண்டும்.

அவ்வாறு இஸ்லாம் மதத்தில் செய்யப்படும் சீர்திருத்தங்கள் வெறும் ஜிகாத்களுக்கு எதிராக மட்டுமல்லாது பழமைவாதிகளின் தூசுபடிந்த தத்துவங்களுக்கும் அடக்குமுறைப் பேச்சுகளுக்கு எதிரான தாகவும் இருக்க வேண்டும். அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட சமுதாயத்தின் யன்னல்களைத் திறந்துவிட்டு சுதந்திரக்காற்றை சுவாசிக்கச் செய்வதாக இருக்கவேண்டும் எனவும் சல்மான். ருஷ்டி தெரிவித்தார்.

# பொருண்மிய மதியுரையகத்தால் சிறுவர் பூங்கா திறந்து வைப்பு

அவுஸ்திரேலியா – விக்ரோறியாவிலுள்ள ஹமில்ரன் அலைக்சான்ரா பாடசாலை நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரைகத்தினால் ஒட்டுசுட்டானில் கடந்த செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி இ.த.க. பாடசாலையில் சிறுவர்கள் மனமகிழ்ச்சியுடன் கல்வியைக் கற்பதற்காக சிறுவர் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வு ரெக் நிறுவன முல்லை மாவட்ட இணைப்பாளர் வை.விமலேந்திரன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது. முதல் நிகழ்வாக ஈகச்சுடரினை பிரான்ஸ் ரெக், பேபி ஏற்றினார். அடுத்ததாக தேசியக்கொடியினை ஒட்டுசுட்டான் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ் அரசன் ஏற்றினார். அகவணக்கத்தைத் தொடர்ந்து பெயர்பலகை திரைநீக்கம் இடம் பெற்றது. இதனை அவுஸ்திரேலியா ரெக் இணைப்பாளர் சண்குமார் திரைநீக்கம் செய்து வைத்தார். அடுத்து சிறுவர் பூங்காவிற்கான நாடாவை திருமதி பேபி வெட்டித்திறந்து வைத்தார். தொடர்ந்து சிறுவர்கள் பூங்காவில் விளையாடும் நிகழ்வு இடம்பெற்றது. அதனையடுத்து மண்டப நிகழ்வாக மங்கல விளக்கேற்றல் நிகழ்வு முதலாவதாக இடம்பெற்றது. அவுஸ்திரேலியா-ரெக் இணைப்பாளர் சண்குமார் கருத்துரை வழங்கும் போது, போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்டு அவுஸ்திரேலியா விக்ரோறியாவிலுள்ள ஹமில்ரன் அலைக்சான்ரா பாடசாலை மாணவர்களினால் சேகரிக்கப்பட்ட நிதியுதவியினால் செய்யப்படுகின்ற முதல்படி தான் இச்சிறுவர் பூங்கா அமைப்பு போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டியுள்ளது. இப்பூங்காவானது குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து அவர்களின் கல்வி நலனிற்கும் உதவும் என்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். அடுத்து கோட்டக்கல்வி அதிகாரி, இ.த.க.பாடசாலை அதிபர், ஒட்டுசுட்டான் ம.வி அதிபர், ஒட்டுசுட்டான் கிராமசேவகர், பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந்நிகழ்வில் சின்னத்தம்பி ம.வி யிற்கும் சூரியமின் கலம் ஒன்று வழங்கப்பட்டது. தொடாந்து பணிப்பாளரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

## கேப்பாப்புலவில் ஐந்து பிள்ளைகளின் தாய் மண்வெட்டியால் வெட்டிக்கொலை

### -சந்தேகநபர் காவல்துறையால் கைது

(முள்ளியவளை)

முள்ளியவளை, கேப்பாப்புலவு, மாஞ்சோலை எனும் இடத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தாயாரான அருளானந்தம்- றோஸ்மலர் என்பவர் மண்வெட்டியினால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். அவரின் தலைப்பகுதியில் வெட்டுக்காயம் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது; கடந்த பத்தாம் திகதி வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த மேற்படி நபர் அவருடைய மகளின் கணவனான மருமகனால் நள்ளிரவு வேளை மண்வெட்டியினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இவரது சடலம் கொலையாளியால் தூக்கிச் செல்லப்பட்டு நந்திக் கடற்கரையில் புதைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக இறந்தவரின் சகோதரர் முள்ளியவளை காவல் பணிமனைக்குத் தெரிவித்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த முள்ளியவளை காவல் பணிமனைப் பொறுப்பாளர் ஜெயகரன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சந்தேக நபரான மருமகன் கைது செய்யப்பட்டு சடலமும் தோண்டி எடுக்கப்பட்டது. சம்பவ இடத்தினை முல்லைத்தீவு குற்றவியல் நீதியாளர் சுமதி பார்வையிட்டார். கொலை செய்தவர் மறைத்து வைத்திருந்த இறந்தவரின் 1/2 பவுண் சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் தான், மண் வெட்டியினால் வெட்டிக்கொலை செய்ததாக காவல் துறையினரிடம் ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.. (20)

## பயிற்சி பெறுவோருக்கு துவிச்சக்கர வண்டிகள்

முல்லைத்தீவு தொழில் நுட்பக்கல்லூரியின் மேலும் ஒரு பிரிவு பயிற்சியாளர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

வீட்டு மின்இணைப்பு பயிற்சியாளர்கள் 25பேருக்கும், ஓவியப்பயிற்சியாளர் ஒருவருக்குமாக மொத்தம் 26 பேருக்கு கடந்த ஐந்தாம் திகதி அன்று துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் மேலும் புதிய பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. மேசன், தச்சுவேலை, நீர்க்குழாய் பொருத்துதல், மின்ஒட்டு ஆகிய பயிற்சிகளும் நடைபெறவுள்ளதால் புதிய பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளவிருப்பதனால் பயில விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் 30.08.2005 இற்கு முன்பு தமக்கு அனுப்பிவைக்குமாறும் அதிபர் தெரிவிக்கின்றார்.(20)

## - புது.வைத்தியசாலையில் -

### தாய் மரணம் குறித்த விசாரணை சிகிச்சையில் குறைபாடில்லையென முடிவு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு தாயின்மரணம் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணை யாழ். மாவட்ட தாய்சேய் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.எஸ்.சொலமன், முல்லை மாவட்ட தாய்சேய் வைத்திய அதிகாரி சுதர்சன் முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி தர்மேந்திரா ஆகியோரால் நடாத்தப்பட்டது.

இதன்படி வைத்தியர்களால் கொடுக்கப்பட்ட சிகிச்சை முறையில் எதுவித குறைபாடுகளும் காணப்படவில்லை. அவர்களால் பாவிக்கப்பட்ட மருந்துகளும், கலவைகளும் சரியான முறைப்படியே கலக்கப்பட்டுள்ளது எனக்கண்டறியப்பட்டது. இதனை யாழ்.மாவட்ட தாய்சேய் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.எஸ். சொலமன் எமது புதுக்குடியிருப்பு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் வழமையாக மயக்கமருந்துகளை சரியான அளவுகளில் பாவித்தாலும்பத்து ஆயிரத்தில் (10000) ஒருவருக்கு இப்படியான பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பம் இலங்கையில் மட்டுமல்ல எல்லா நாடுகளிலும் நிகழ்கின்றன. யாழ்ப்பாணத்திலும் சில வருடங்களுக்கு முன்பு இப்ப டியான ஒரு தாய் மரணம் நிகழ்ந் துள்ளது. புதுக்குடியிருப்பில் இவ் வகையான மயக்க மருந்தினால் தாய் மரணம் ஏற்பட்டது இதுவே முதல் தடவையாகும் என்றார்.(08)

## மாணவர்களுக்கு உதவி

(வட்டக்கச்சி)

யுனிசெப் நிறுவனத்தினரால் வட்டக்கச்சிப் பிரதேச பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவிகளுக்கு கற்றல் அல்லாத பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. தரம் ஏழு தொடக்கம் தரம் 13 வரையான மாணவிகளுக்கு துவாய், சவர்க்காரம், சீப்பு, சம்போ, பற்தூரிகை, பற்பசை, சட்டைப்பின், றின்சோ, கைத்துடைப்பான் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது.(12)

## ஓட்டுத்தொழிற்சாலை இயந்திரத்தில் சிக்கி தொழிலாளி படுகாயம்

(முள்ளியவளை)

ஒட்டுசுட்டான் கூளாமுறிப்பு ஓட்டுத்தொழிற்சாலை ஊழியர் உற்பத்தி இயந்திரத்தில் சிக்குண்டு படுகாயத்துடன் மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி பகுதியிலுள்ள பண்டார வன்னியன் ஓடு செங்கல் தொழிற்சாலையில் மின் ஒட்டுப்பகுதியில் பணியாற்றிவந்த வாமதேவன் (வயது-38) என்பவர் மூலை ஓடு உற்பத்தி செய்யும் இயந்திர பழுதினை மின்ஒட்டு செய்து கொண்டிருந்தவேளை அவ்வியந்திரம் இயக்கப்பட்ட தினால் மேற்படி பணியாளரின் வலதுகை அதற்குள் அகப்பட்டுக் கொண்டது. இதனால் கைநசிந்த நிலையில் படுமோசமான காயத்திற்கு உள்ளானார். மீட்கப்பட்டஅவர் முள்ளியவளை மத்திய மருந்தகத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி சம்பவமானது கடந்த பத்தாம் திகதி இடம்பெற்றது. (ஆ)

## மாகாணமட்டப் போட்டியில் வெற்றி

கடந்த ஏழாம் திகதி வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற வடக்கு கிழக்கு மாகாணமட்ட தமிழ்த்தினப்போட்டியில் வில்லிசை நிகழ்வில் கலந்துகொண்ட மு/முத்து ஐயன்கட்டு வலது கரை அ.த.க. பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற மாவட்ட மட்ட நிகழ்வில் மேற்படி பாடசாலை வில்லிசைப்போட்டி நிகழ்வில் முதலாம் இடத்தினையும் நாடக நிகழ்வில் இரண்டாமிடத்தினையும் பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்று திரும்பிய மாணவர் களை பாடசாலை நிர்வாகத்தினர் பாராட்டி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## மத்தியகல்லூரி கலையரங்கில் இரு இசை நாடகங்கள் மேடையேற்றம்

(நமது நிருபர்)

புதிதாக அமைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழாக்கலையரங்கில் கலா பூசணம் செல்லையா மெற்றாஸ் மெயில் தயாரித்து வழங்கும் "பவளக்கொடி" "பூதத்தம்பி" ஆகிய இரு இசை நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

நாளை பிற்பகல் 2.30 மணிக்கு "பவளக்கொடி" நாடகமும், இரவு 7.00 மணிக்கு "பூதத்தம்பி" நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன.

முன்னணிக் கலைஞ்களாக நடிக கலாமணி அரியாலையூர் செல்வம், கலாபூசணம் மெற்றாஸ்மெயில், கலாநிதி த.கலாமணி, நா.விமலநாதன் ஆசிரியர், வை.கலாவித்தகர் வ.தயாநிதி ஜோன்கவாஸ் ஆகியோரும் இந்நாடகங்களில் பங்கு கொள்கின்றனர்.

## பொன்விழா நிகழ்வு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியின் பொன்விழா நிகழ்வின் இரண்டாம் நாள் நேற்று முன்தினம் நிகழ்வுகள் மாலை 3.30 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட கலாச்சார மண்டபத்தில் பாடசாலை முதல்வர் ட.முசிவலிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழவில் முல்லை.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்கள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து கலைநிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றன. இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் அவர்களும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளி. மகாவித்தியாலயம் தேசிய போட்டிக்குத் தெரிவு

(அலுவலகசெய்தியாளர்)

வடக்குகிழக்கு மாகாண மட்டத்திலான தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டியில் திறந்த பிரிவில் நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்று கிளிநொச்சி மகாவித்தியாலயம் தேசிய ரீதியான போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

கடந்த ஏழாம் திகதி வவுனியாவில் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண மட்டத்திலான போட்டியில் திறந்த பிரிவில் நாடகத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசியத்திற்குத் தெரிவாகியுள்ளது.

அத்துடன் பிரிவு நான்கில் பேச்சுப்போட்டியில் செல்வி ம.திருநயனி மூன்றாம் இடத்தையும், பிரிவு நான்கில் பாஓதல் போட்டியில் செல்வி ஆ. ரம்மியா இரண்டாம் இடத்தையும், பிரிவு ஐந்தில் சிறுகதைப்போட்டியில் செல்வி ஆர். சசிகலா மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாண நிலையில் நான்கு இடங்களை கிளிநொச்சி மகாவித்தியாலயம் தனதாக்கிக்கொண்டுள்ளது.

தேசிய ரீதியில் போட்டிக்கு தெரிவாகியுள்ள கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் திறமையினை பாடசாலை நிர்வாகத்தினர் பாராட்டியுள்ளனர். (கு)





## பேருந்து போக்குவரவு இன்றி தேத்தாவடி மக்கள் அவதி

(மல்லாவி)

மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேத்தாவடி கிராமமக்கள் பிரயாணங்களை மேற்கொள்ள பேருந்து போக்குவரத்து இன்றி பெரும் அவதியுறுகின்றனர்.

இக் கிராமத்தில் 22 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் வாழும் மக்கள் சிறு தொழில்களையும், விவசாய பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இம்மக்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளுக்கும் கல்விகற்பதற்கும் இலுப்பைக்கடவைக் கிராமத்திற்குச்செல்ல வேண்டும். அதேநேரம் இதனூடாக பேருந்து சேவைகள் குறித்த நேரத்திற்குச் செல்லாததால் நோயாளர்கள்,விவசாயிகள்,பிரயாணம் மேற்கொள்வோர், பாடசாலை மாணவர்கள்எனப்பலரும்அவதிக்குள்ளாகியுள்ளனர். (24)

# கடற்றொழிலாளருக்கான உதவிப்பொருட்கள் வேண்டுமென்றே இராணுவத்தால் தடுப்பு

## -கடற்றொழில் சங்கங்களின் சமாசம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கான நோர்வே அரசின் உதவியின் கீழ் எடுத்துவரப்பட்ட பொருட்களை சிறிலங்கா இராணுவம் வேண்டுமென்றே ஓமந்தை இராணுவ சோதனைச்சாவடியில் தடுத்து வைத்திருந்ததாக கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

இது தொடர்பாக அவசர கடிதமொன்றையும் அச்சமாசம் இலங்கைக்கான நோர்வே தூதுவராலயத்திற்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் போது சேதமடைந்த மீன்பிடிப்படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்களை திருத்துவதற்கான மூன்று படகு திருத்துமிடங்கள் வடமராட்சிப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இப்படகுத்திருத்துமிடங்களை நிறுவவும், திருத்தவேலைகளைச செய்யவுமென நோர்வே அரசு நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கியுள்ளது.

இப்படகுத்திருத்துமிடங்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வாகனமொன்றே கடந்த புதன்கிழமை படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. புலிகளது பாவனைக்கென இப்பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதாக கூறியே அவ்வாகனம் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளா சங்கங்களின் சமாசம் வவுனியா அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து அவர் படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இப்பேச்சுக்களையடுத்தே குறித்த வாகனம் யாழ்.செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் தொடர்ச்சியாக இவ்வாறான பொருட்கள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படுகின்ற நிலையில் படையினரின் தற்போதைய தடை தொடர்பாக கடற்றொழில் சமாசம் நோர்வேநாட்டு தூதரகத்திற்கு அறிவித்துள்ளது. (27)

# மனித உரிமைகளை மேம்படுத்த மண்டைதீவில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான விசேட நடவடிக்கைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

மண்டைதீவில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பலவகையான இராணுவக்கெடுபிடிகள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இந்தக்கெடுபிடிகளால் அங்கு அடிப்படை மனித உரிமைமீறல் சம்பவங்களும் அதிகம் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலைமைகளைக் கவனத்தில் கொண்டே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டத்தின் கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் எதிர்வரும் 18ஆம் திகதி மண்டைதீவுக்கு விஜயம் செய்யும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் அங்கு குடியமரச்சென்றுள்ள மக்களை நேரில் சந்தித்து மக்கள் எதிர்கொள்ளும் உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகளைச் சேகரிக்கவுள்ளனர். (33)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் 72 முன்பள்ளிகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்காக 72 முன்பள்ளிகள் நிர் மாணிக்கப்பட்டுவருவதாக சுனாமி அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் செயலணியின் பணிப்பாளர் சு.பாலையா தெரிவித்துள்ளார். உலக தரிசன நிறுவனம்,போரூட், தமிழர்புனர்வாழ்வுக்கழகம், கியூடெக், கியூ மெடிக்கா, சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற தொண்டர் நிறுவனங்கள் தாமாகவே முன்வந்து இவ் 72 முன்பள்ளிகளையும் நிர்மாணித்து வருகின்றன.

இதில் 35 முன்பள்ளிகளினது நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்து விட்டதாகவும் ஏனையவற்றின் நிர்மாணப்பணிகள் துரிதகதியில் இடம் பெற்று வருவதாகவும் எவ்வாறாயினும் இவ் 72 முன்பள்ளிகளும் இன்னும் ஒருசில மாதங்களுள் நிர்மாணித்து முடிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் கூறினார்.(33)

# பருத்தித்துறை முனைப்பகுதியில் "வான்" புனரமைப்பு ஆரம்பம்

பருத்தித்துறை முனைக்கிராமத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்து போயுள்ள "வான்" பாதைகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் அ.இரட்ணகுமார் தலைமையில் அக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் "வான்" புனரமைப்புப்பணிகளை ஆரம்பித்தனர்.

முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கமும், சுனாமி அனர்த்த புனர்வாழ்வுச்செயலகமும் இணைந்து இப்புனரமைப்புப்பணிகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. "வேள்ட் விசன்" நிறுவனம் இதற்கான உதவிகளை வழங்கிவருகின்றது.

மனித வலுவைமட்டுமே நம்பி புனரமைப்புப்பணிகளை மக்கள் ஆரம்பித்துள்ளனர். எனினும் மனித வலுமூலம் வேகமாகவும், பாரிய அகழ்வுகளையும் மேற்கொள்ள முடியாது என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசப்பிரதிநிதிகள் எடுத்துக்கூறியதையடுத்து இன்னும் ஒருசில நாட்களுக்குள் கனரக வாகனம் ஒன்றைப்பெற்றுத்தருவதாக "வேள்ட்விசன்" நிறுவனம் உறுதியளித்துள்ளது.

இதேவேளை ஏற்கனவே பருத்தித்துறை சுப்பர்மடம் பொலிகண்டிப் பகுதிகளில் "சேவாலங்கா" நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த "வான்" புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன. (கா)

# சிறைச்சாலையில் இளைஞன் சித்திரவதை; காவலர்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதியொருவரை சித்திரவதைக்குள்ளாக்கியதாகக் கூறப்படும் யாழ்.சிறைச்சாலை காவலர்கள் மூவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பணிமனை சிபார்சு செய்துள்ளது.

குற்றச்செயலுடன் தொடர்பு பட்டதாகக் கூறி வல்வெட்டித்துறை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருந்த சந்தைவீதி உடுப்பிட்டியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே சிறைச்சாலைக் காவலாளரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

குறித்த இளைஞனான மனோகரன் ஜதீஷ்வரன் (வயது-23) என்பவரின் தந்தையால் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவினர் யாழ். அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து ஆணைக்குழு அதிகாரிகள் நேரடியாக சிறைச்சாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

சித்திரவதைகளால் ஏற்பட்ட காயங்களை நேரில் பார்த்த அதிகாரிகள் பாதிக்கப்பட்ட இளைஞனது வாக்கு மூலத்தை பதிவு செய்ததுடன் சித்திரவதைக்கு உள்ளாக்கியதாகக் கூறப்படும் சிறைக்காவலர்கள் மூவரது வாக்குமூலத்தையும் பதிவுசெய்திருந்தனர்.

இவ்விசாரணைகளையடுத்தே சித்திரவதைகளை மேற்கொண்டதாகக் கூறப்படும் சிறைக்காவலர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கான சிபார்சினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் கொழும்பிலுள்ள அதன் தலைமையகத்திற்கு அனுப்பிவைத்துள்ளது. (27)

# விவசாயம், கால்நடை, பனை மீள்நடுகை; யாழ்.மாவட்டத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.குடாநாட்டில் விவசாயம், கால்நடை, பனை மீள்நடுகை தொடர்பான விசேட கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் சமாச கூட்ட மும் நாளை மறுதினம் 2005 இற்கான பனை மீள்நடுகை தொடர்பான கூட்டமும் செவ்வாய்க்கிழமை விவ சாய அபிவிருத்தி தொடர்பான கூட்ட மும் இடம்பெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அமைப்புக்கள், திணைக்களங்களை சேர்ந்தோர் இக்கூட்டத்தில் தவறாது பங்குகொள்ளுமாறு தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. (28)

# மண்டைதீவு மக்களுக்காக நடமாடும் வைத்தியசேவை

(மண்டைத்தீவு)

யாழ். மண்டைத்தீவு மக்களுக்காக நடமாடும் வைத்திய சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நடமாடும் வைத்திய சேவை பிரதி திங்கள் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் 4.30 மணிவரை நடத்தப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் இந் நடமாடும் வைத்திய சேவையில் வேலணை அரசினர் வைத்திய சாலையைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதியர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முற்று முழுதான இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படும் மண்டைதீவில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதும் இம்மக்களின் தேவைக்காக அங்கு சேதமடைந்த நிலையில் காணப்படும் மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையை புனரமைத்து மீள இயங்க வைக்க படையினர் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளனர்.

இதனால் வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவலங்களை எதிர் கொண்டுள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொணடே இந்நடமாடும் வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (33)

# தனியார் சிற்றூர்திகளின் சேவையை வைத்தியசாலை வரை அதிகரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்புவலய நுழைவாயிலில் இருந்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வரையிலான இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் போக்குவரத்துச் சேவையை நடத்த தனியார் சிற்றூர்திகளுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகளின் உரிமையாளர்கள் யாழ் அரசஅதிபர் கே.கணேஷிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை பொது மக்களின் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து வலிகாமம் வடக்கு பாதுகாப்பு வலய நுழைவாயில் பகுதியில் இருந்து தெல்லிப்பழை வைத்தியசாலை வரையான பாதுகாப்பு வலயபகுதியில் சேவையில் ஈடுபட வடபிராந்திய போக்கு வரத்துச்சபை பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் இராணுவம் இப்பகுதியில் சேவையில் ஈடுபடதனியார் சிற்றூர்திகளுக்கு அனுமதி வழங்கவில்லை.

இதனால் தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு செல்வதற்கென சிற்றூர்திகளில் ஏறும் பயணிகளை பாதுகாப்பு வலயநுழைவாயில் பகுதிலேயே இறக்கிவிட்டு திரும்ப வேண்டிய நிலை தனியார் சிற்றூர்தி சேவையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகிவருகின்றமையைச் சுட்டிக்காட்டியே சிற்றூர்தி உரிமையாளர்கள் அரச அதிபரிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். (33)

# விழிப்புணர்வு கண்காட்சி

யாழ். மாவட்ட மிதிவெடி அலுவலர்கள் திணைக்களத்தினால் மிதிவெடி விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் அடைக்கல மாத கோவில் அருகில் மிதிவெடி அபாயம் சம்பந்தமான கண்காட்சியை எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலை மாணவர்களிடமிருந்து மிதிவெடி சம்பந்தமான ஆக்கங்கள் பெறப்பட்டு கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

மிதிவெடியில் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு செல்வதால் மக்கள் மத்தியில் கண்ணிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண் காட்சிகள் மூலம் யாழ். மக்களை விழிப்படையச் செய்வதே இந்த மிதிவெடி விழிப்புணர்வு வாரத்தின் முக்கிய நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கீ)

# "வெண்புறா" நிறுவனத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டில் மிதிவெடி விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். குடாநாடெங்கும் மிதிவெடி செயற்பாட்டு விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் வெண்புறா நிறுவனத்தால் இந்த மிதிவெடி விழிப்புணர்வு வார நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இவ் வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் முற்பகல் பத்து மணிக்கு யாழ். நாவலர் கலாச்சார மண்டபத் தில் நடை பெறவுள்ளாது.

இதன் போது ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் வெண்புறா நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு விழிப்புணர்வு வாரம் பற்றிய அறிமுக உரைகளையும் கருத்துரைகளையும் வழங்கவுள்ளனர்.

# பெற்றுக்கொள்ளவும்


கந்தையா தெய்வேந்திரம், (உதவி ஆணையாளர் கமநல சேவை நிலையம் வவுனியா) என்பவரது பயண அனுமதியட்டை நாவற்குழிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

# 'டிஸ்கவரி' ஒரு திகில் பயணம்!

கடந்த வாரம் சர்வதேச அளவில் அனேகம் பேரால் உச்சரிக்கப்பட்ட சொல் 'டிஸ்கவரி'. விரும்பியோ விரும்பாமலோ அனேகம் பேரின் காதுகளில் விழுந்த இந்த 'டிஸ்கவரி' ஏன் இவ்வாறு பிரபல்யமாகப் பேசப்பட்டது? அதற்கு நிறையவே காரணம் இருக்கிறது.

முதலில் இந்த 'டிஸ்கவரி' என்றால் என்ன அதன் செயற்பாடு என்ன என்பதை பற்றிப் பார்ப்போம்.

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டின் உலகம் எட்டியிருக்கும் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் உயரிய வளர்ச்சியின் ஓர் அங்கமாய் இருக்கும். அண்டவெளி ஆராய்ச்சியின் தளம் ஒன்று பூமியிலிருந்து பல்லாயிரம் கிலோ மீற்றருக்கு



டிஸ்கவரியுடன் விஞ்ஞானிகள் (படம்:- நாசா)

அப்பால் புவியீர்ப்பு விசையற்றதான அண்டவெளி மண்டலத்தில் மிதந்து கொண்டிருக்கிறது.

'சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையம்' என அழைக்கப்படும் இத் தளத்தில் இரண்டு விஞ்ஞானிகள் தங்கி இருந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர் அங்கிருந்துகொண்டே பூமியை பற்றி ஆராய்வது, பூமியில்இடம் பெற்ற, இடம் பெறப் போகும் இயற்கை மாற்றங்கள் பற்றி ஆராய்வது, அதைவிட முக்கியமாக அண்டவெளியில் இருக்கும் கிரகங்கள், நட்சத்திரங்கள், கோள்கள் என்பன பற்றிய ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுவரும் இந்த சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு தேவையான தொழில்நுட்ப உபகரணங்களையும் அங்கு பணிபுரியும் விஞ்ஞானிகளிற்கு தேவையான ஒட்சிசன் வாயு மற்றும் உணவுப் பொருட்களையும் பூமியிலிருந்தே அனுப்பப்படுகின்றது.

அப்படிப்பட்ட ஒரு செயற்பாட்டிற்காகவே "டிஸ்கவரி" விண்கலமும் கடந்த யூன் மாதம் 26ஆம் திகதி அமெரிக்காவினால் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தை நோக்கி அனுப்பப்பட்டது.

ஏழு விண்வெளி வீரர்களுடன் புறப்பட்ட 'டிஸ்கவரி' புறப்பட்டதுமே அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகளிற்கும் தலையிடி தொடங்கிவிட்டது 'டிஸ்கவரி' விண்ணைநோக்கிச் செல்ல ஆரம்பித்து சில வினாடி நேரத்திற்குள்ளாகவே 'டிஸ்கவரி' எரிபொருள் தாங்கியின் வெளிப்புறத்திற்கு பாதுகாப்பாகவிருந்த வெப்பத்தடுப்புக் கவசத்தின் சில துண்டுகள் உடைந்து கீழே விழுந்தன.

ஆனால் திட்டமிட்டபடி 'டிஸ்கவரி' சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்துடன் போய் இணைந்து கொண்டது. இதில் விஞ்ஞானிகளிற்கு ஏற்பட்ட மிகப் பெரிய கவலை என்னவென்றால் 'டிஸ்கவரி'யை எவ்வாறு பூமிக்கு பாதுகாப்பாக கொண்டு வருவது என்பதுதான்.


விஞ்ஞானிகளிற்கு ஏற்பட்ட கவலை ஏன் என்பதை அறிவதென்றால் சற்று இந்த உதாரணத்தை கவனியுங்கள் .வானவெளியில் இருந்து வருகின்ற ஆகாயக் கற்கள் புவியீர்ப்பு விசைக்குள்ளும் அதன் காற்று மண்டலத்திற்குள்ளும் புகுந்துவிட்டால் அதன் வேகம் பல மடங்காக அதிகரித்து வளிமண்டலத்தின் உராய்வில் சூடேறி பின் வளிமண்டலத்தில் இருக்கின்ற எரிதலுக்குக் காரணமான ஒட்சிசன் ($O^2$) வாயுவுடன் தாக்கத்தில் ஈடுபட்டு எரிந்து சாம்பராகி விடுகின்றது. இதை நாம் சில வேளைகளில் எதேச்சையாக வான்வெளியில் காணக் கூடியதாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு நிலையிலே பூமியை நோக்கி வருகின்ற விண்ணோடம் என்றாலும் அதற்கும் அதே கதிதான். ஆனால் அப்படிப்பட்ட ஒரு ஆபத்தை தடுப்பதற்காகவேதான் விஞ்ஞானிகளால் 'டிஸ்கவரி' ஓடத்தின் எரிபொருள் தாங்கியின் வெளிப்புறத்தில் வெப்பத்தைத் தாங்கக் கூடியதான பாதுகாப்பு கவசம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் சில பகுதிகள் தான் உடைந்து விழுந்திருந்தன.

இந்த ஆபத்தான நிலையில் விஞ்ஞானிகளிற்கு ஒரு முன் அனுபவம் ஒன்று கைகொடுத்திருந்தது. அதாவது 2003 ஆம் ஆண்டு இதேபோன்ற ஒரு பணிக்காக சென்ற 'கொலம்பியா' என்ற விண்கலம் பணியை முடித்து திரும்புகையில் வெளிப்புறத்தில் வெப்பத்தடுப்புக் கவசம் உடைந்ததன் காரணமாக அதன் வளியாக வெப்பம் உட்சென்று விண்கலம் எரிந்து அதில் இருந்த ஏழு விண்வெளி வீரர்களும் கொல்லப்பட்டனர். இதில் இந்தியாவைச் சேர்ந்த 'கல்பனா சாவ்லா' என்ற பெண் விண்வெளி வீராங்கனையும் அடங்குவார்.

இந்தத் துயர அனுபவத்தை பெற்றிருந்த நாசா விஞ்ஞானிகள் முன் எச்சரிக்கையாக இம்முறை ஒரு வித்தியாசமான நடைமுறையை கையாண்டிருந்தனர். அதாவது 'டிஸ்கவரி' யில் ஏற்படுகின்ற சிறிய கோளாறுகளை அண்டவெளியில் வைத்தே சரிபார்ப்பது என. அதன்படியே 'டிஸ்கவரியில்' சென்ற இரு வீரர்கள் வெளியே மிதந்து வந்து டிஸ்கவரியின் வெளிப்புறத்தில் ஏற்பட்டிருக்கும் உடைவுகளை சரிசெய்தனர். இந் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவுற்றதா? இல்லையா? என்பது டிஸ்கவரி விண்ணோடம் பூமிக்கு திரும்பும் போதே தெரியும் எனும் துர்ப்பாக்கிய நிலை விஞ்ஞானிகள் மத்தியிலும் உலக மக்கள் மத்தியிலும் தொடர்ந்தும் நீடித்தது.

'டிஸ்கவரி' விண்கலம் மிதக்கும் விண்வெளி மையத்திலுள்ள கழிவுகளை அகற்றிவிட்டு புதிதாக பன்னிரண்டு தொன் எடையுள்ள கருவிகளை நிர்மாணித்து முடித்தது. அங்கு தங்கியிருக்கும் இரு விண்வெளி வீரர்களுடன் பொழுதை இனிதே கழித்து பூமிக்கு புறப்படத் தயாராகியது. ஆனால் நாசா கட்டுப்பாட்டு அறையில் இருக்கும் விஞ்ஞானிகளோ தலையை பிய்த்துக் கொண்டிருந்தார்கள்.

'டிஸ்கவரி' இந்தமாதம் எட்டாம் திகதி பூமியை வந்தடையும் என முதலில் தெரிவிக்கப்பட்டது. அதற்கேற்றாற்



டிஸ்கவரியை விண்ணில் மிதந்தபடி பழுதுபார்க்கும் விஞ்ஞானி (படம்:- நாசா)

போல் டிஸ்கவரியும் சர்வதேச விண்ஆய்வு மையத்திலிருந்து பிரிந்து அண்டவெளியில் தனக்குரியசுற்றுவட்டத்தில் சுற்றத் தொடங்கியது. ஆனால் டிஸ்கவரி இறங்கவிருக்கும் புளோரிடா மாநிலத்தில் உள்ளகென்னடி விண்வெளி' ஆராய்ச்சி மையத்தின் மேல் மேக மூட்டங்கள் அதிகமாக இருந்ததினால் டிஸ்கவரியின் வருகை ஒருமணி நேரம் தள்ளிவைக்கப்பட்டது. அந்நிலையிலும் மேக மூட்டங்கள் கலையாததினால் டிஸ்கவ



டிஸ்கவரி பூமியில் இறங்கும் நிலையில் (படம்:- நாசா)

ரியின் பயணம் ஒருநாள் தள்ளிவைக்கப்பட்டது. அடுத்த நாளும் இதே நிலை நீடித்தால் "டிஸ்கவரி" இறங்கும் இடத்தை மாற்ற விஞ்ஞானிகள் முடிவெடுத்தனர்.

இந்த முடிவு டிஸ்கவரி விண்ணோட கட்டுப்பாட்டாளர் ஏய்வின் கோலிற்கு' நாசா விஞ்ஞானிகளால் அறிவிக்கப்படுகிறது அறிவிக்கப்பட்ட வேளை டிஸ்கவரி பூமியிலிருந்து நான்கு இலட்சம் அடி உயரத்தில் மணிக்கு 27 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் அதன் சுற்றுவட்டத்தில் பயணித்துக் கொண்டிருந்தது. அறிவித்தல் கிடைத்ததும் டிஸ்கவரியின் விமானி மூன்று நிமிடங்கள் ஒரு இயந்திரத்தை இயக்க டிஸ்கவரி பூமியை நோக்கி இறங்கத் தொடங்கியது. இப்போது அதன் வேகம் மணிக்கு 300 கிலோ மீற்றரால் குறைகிறது.

பூமியின் காற்றுமண்டலத்திற்குள் டிஸ்கவரி பிரவேசித்ததும் பூமியை ஒரு அரை வட்டமளவில் சுற்றி தன் வேகத்தை குறைத்துக்கொண்டு சரியாக கடந்த 9ஆம் திகதி தமிழீழ நேரப்படி மாலை 5.42 மணியளவில் அமெரிக்காவிலுள்ள எட்வர்ட்ஸ் விமானப்படைத் தளத்தில் மூன்று கிலோ மீற்றர் ஓடுபாதையில் வெற்றிகரமாக தரையிறங்கியதும் தான் நாசா விஞ்ஞானிகள் நிம்மதிப்பெரு மூச்சு விட்டார்கள்.

15 நாள் விண்வெளி பயணத்தை முடித்துக்கொண்ட விண்வெளி வீரர்கள் ஏழு பேருக்கும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தனது வாழ்த்தை தெரிவித்தார். விண்ணோடம் தரையிறங்குவதை தொலைகாட்சிகளில் நேரடியாக கண்டுகளித்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

(ப.துஷ்யந்தன்)

# நெற்பயிரைத் தாக்கும் கபிலநிற தாவரத்தத்தி

## — தாக்கத்தை அடையாளம் காணல்

தாய்ப்பூச்சிகளும், அணங்குகளும் (குஞ்சுகள்) நெற்பயிரின் அடிப்பாகத்திலிருந்து தாவரச்சாற்றை உறுஞ்சுவதால் இலைகள் உலர்ந்து வைக்கோல் போன்று காணப்படும். இத் தத்தி எரிவு எனப்படும். தத்தி எரிவு வயலில் தொட்டம் தொட்டமாகவே காணப்படும்.

தத்திகள் பரவுவதற்கு சாதகமான காரணிகள்.

01.நெருக்கமாக(அடர்த்தியாக) விதைத்தல்.

02.பாதிக்கப்படக் கூடிய நெல் வர்க்கங்களை விதைத்தல்.

03.நினைத்த நேரத்தில் செய்கை. பண்ணல்.

நிறையுடலி (தாய்ப்பூச்சி)

தாய்ப்பூச்சி மண்ணிறத்தில் [illegible] ஆண், பெண் பூச்சிகள் [illegible] நீண்டசிறகுகளையும் கட்டையான சிறகுகளையும் கொண்டவையாகும் . கட்டையான சிறகுகளைக் கொண்ட பூச்சிகளால் பறக்கமுடியாது. எனவே ஒரே இடத்திலேயே இனப் பெருக்கம் செய்கின்றன. ஆனால் நீண்ட சிறகுகளைக் கொண்டவை பறக்கும். இவையே ஒருவயலிருந்து ஏனைய வயல்களுக்குப் பரவுகின்றன. கட்டையான சிறகுகளைக் கொண்டவை. தமது வாழ்க்கைக் காலமான இருவாரங்களில் 300 முட்டைகள் வரை இடும். இதேவேளை நீண்டசிறகுள்ளவை 100 முட்டைகள் வரை இடும். அரிவாள் போன்ற சூலிடப் படுத்தியினால் தாவரஇழையங்களைத்துளையிட்டே முட்டைகள் இடும். நிறையுடலிகள் தாவரத்தின் அடிப்பகுதியிலேயே எப்போதும் வசிக்கும். நீண்டசிறகுகளைக் கொண்டவை இரவில் ஒளியைநாடிச் செல்லும்.

முட்டை:~

நிறையுடலிப் பெண் தத்திகள் பெரும் எண்ணிக்கையான முட்டைகளை (200 வரையில்) கூட்டமாக நெற்பயிரின் அடிப்பகுதியில் உள்ள இலைமடல் பகுதியிலுள் அல்லது இலை நடு நரம்புப் பகுதியிலுள் இடுகின்றன. முட்டைகள் வெண்ணிறமானவை, நீண்டவை. 5~9 நாட்களில் முட்டைகளில் இருந்து இளம் அணங்குகள் வெளியேறுகின்றன.

அணங்குகள் (குஞ்சுகள்):~

இளம் அணங்குகள் மிகவும் மெல்லியவை வெண்ணிறமானவை 0.6 மி.மீ நீளம் உடையவை. இவை இலையில் அல்லது இலை மடலில் சாற்றை உறுஞ்சிக் குடிக்கும்.அணங்குகள் நிறையுடலிகளாக (தாய்ப்பூச்சி) மாறுவதற்கு 12~18 நாட்கள் தேவைப்படுகின்றன.

கபிலநிறதாவரத்தத்தியின் வாழ்க்கை வட்டம் நிறைவடைவதற்கு 03 வாரங்கள் தேவைப்படுகின்றன.

கட்டுப்படுத்தல்:~

I.இரசாயனக்கட்டுப்பாட்டுமுறை பின்வரும் பூச்சி நாசினிகளில் ஒன்றை சிபார்சின்படி பாவிக்கவும்.

01. கார்போபியூரான் 3% குருணல்

02. பியூபுறோ பெசின் 10% கரையும் தூள்

03. இமிடாக்குளோபிறிட்.

04. பிப் ரோனில் (5) பெனோபியுகார்ப்

II.இரசாயனமற்றமுறை:~

01.விளக்குப் பொறி வைத்து தாய்ப்பூச்சிகளை அழிக்கலாம்.

02.15 கிலோகிராம் அரிசித் தவிடுடன் 3லீட்டர் மண்ணெண்ணையைக் கலந்து ஒரு ஏக்கர் நெற்பயிரில் காலையில் நெற்பயிரில் தூவி விட வேண்டும். மேற்கூறிய கலவையை நெற்பயிரின் அடிப் பாகத்தில் படுமாறு தூவவேண்டும்.

03. நீரை 04 அ[illegible]து 05 நாட்களுக்கு முற்[illegible] வடி[illegible] செய்து வயலை உலரவ[illegible] மூலம் கட்டுப்படுத்த முடியு[illegible]

நா குகாநந்தன்,
விவசாயப் போதனாசிரியர்,
ஒட்டுசுட்டான்.

# அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு சிறிலங்கா அரசு காலக்கெடு!

***ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்காக சிறிலங்கா அரசாங்கம் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இம்மாத இறுதிவரை கால அவகாசம் வழங்கியுள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் வீடுகளை அமைத்துக்கொடுக்க முடியாவிடில் தங்களின் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளுமாறும் அறிவித்துள்ளது.***

பெயர் பெற்ற சில முக்கிய அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அரசாங்கம் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக அரச உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். சுமார் 10-15 அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்கள் இதுவரை வீடுகளைக் கட்டும் பணிகள் எதனையும் ஆரம்பிக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

டிசம்பர் மாதம் 26 திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 34.500 வீடுகளை அமைத்துக்கொடுக்க அரசசார்பற்ற நிறுவனங்களுடன் 350 உடன்படிக்கைகளில் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

இதில் பெரிய தொண்டு நிறுவனங்களுக்கு காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதும், அவர்கள் 18.000 வீடுகளைஅமைத்துக் கொடுப்பதென்று ஏற்பாடாகியிருந்தது.

குறித்த கால எல்லைக்குள் வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படாவிடில் அவர்களிடமிருந்து காணிகள் மீளப்பெறப்படும் எனவும் அந்த அதிகாரி கூறினார். ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகள் தகுதியற்றவையாக இருத்தல் அல்லது ஒப்பந்தக்காரர்களின் பிரச்சினை என்பதாலேயே தாமதம் ஏற்படுவதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

# விமல் வீரவன்சவிடம் பொலிசார் விசாரணை

சகவாழ்வு மன்றத் தலைவர் குமார் ரூபசிங்கவிற்கு மரண அச்சுறுத்தல் விடுத்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சிறிலங்கா இரகசிய பொலிசா கடந்த புதன்கிழமை ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில், குமார் ரூபசிங்கவுக்கு அச்சுறுத்தல் விடும் விதத்தில் விமல் வீரவன்ச பேசினாரென இரகசிய பொலிசாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இந்த விசாரணைகள் நடைபெற்றன. இந்த விடயத்தில் விமல்வீரவன்சவுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்காக இரகசியப் பொலிசார் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைக் கோரியிருக்கின்றனர்.

# கைதான பல்கலை. மாணவர் 18ஆம் திகதி வரை மறியலில்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் போது கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# பதவிகளை நிரந்தரமாக்குமாறு பட்டதாரி பயிலுநர் போராட்டம்

அரசதுறைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகள் தம்மை நிரந்தரமாக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். கூட்டு முன்னணி அரசாங்கம் தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக 42 ஆயிரம் பட்டதாரிகளை அரசதுறையில் இணைத்துக் கொண்டது. எனினும் இதுவரை தம்மை நிரந்தரமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என குற்றம் சுமத்தியே இன்றைய ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லிப்டன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பாதயாத்திரையாக கோட்டை தொடருந்துமையம்வரை சென்றனர்.

இதேவேளை இன்று இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து கோரிக்கை மனுக்களை கையளிப்பதோ அல்லது அரசாங்கத்தின் அமைச்சர்களை சந்திப்பதோ தமது நோக்கம் அல்ல என தொழில்பெற்றுள்ள பட்டதாரிகள் சங்கத் தலைவர் சந்தன சூரியாராட்சி தெரிவித்துள்ளார்.

தமது தொழிலை நிரந்தரமாக்கக் கோருவது மாத்திரமே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சிறிலங்கா அதிரடிப்படையினரின் தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரரின் வித்துடல்கள் விதைப்பு

அதிரடிப்படையினரின் தாக்குதலில் கடந்த புதன் கிழமை வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இரு போராளிகளின் வித்துடல்களும் நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப் பெற்றுள்ளன.

கடந்த புதன்கிழமை காலை அதிரடிப் படையினரின் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வெள் ளையன் ரமேஸ், சுஜிவேந்தன் ஆகிய இந்தப் போராளிகளின் வித்துடல்கள் அவர்களது சொந்த இடமான விநாய கபுரத்தில் காலை 7.00 மணிதொடக்கம் 8.30 மணிவரை மக்களின் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டு பின்னர் ,கஞ்சிகுடிச்சாறில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் விடுதலைப்புலிகளின் பூரணஇராணுவ மரியாதையுடன் புனிதவிதைகுழிகளில் விதைக்கப் பெற்றன.

முன்னதாக நடைபெற்ற வீர வணக்க நிகழ்வு கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் வீரமணி தலைமையில் நடைபெற்றது.

இதில் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் ராம், தளபதி ஜனார்த்தனன், அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், நிர்வாகப் பொறுப்பாளர் தொல்காப்பியன், அம்பாறை மாவட்ட மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் ஜெயா, மற்றும் போராளிகள், மக்கள் எனப் பெருந்தொகையானவர்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு தமது இறுதி வணக்கதைச் செலுத்தினர்.

இதேவேளை நேற்று முன்தினம் கஞ்சிக்குடியாறில் அரச காரியாலயங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், கடைகள் என்பன இயங்காத அதே வேளை, வாகனப் போக்கு வரத்துக்கள் எதுவும் இடம் பெறவில்லை. இதனால் அங்குள்ள வீதிகள் யாவும் மக்கள் நடமாட்டம் இன்றி வெறுமையாகக் காணப்பட்டது.

# தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் செப்ரெம்பரில் சுகவீனவிடுப்பு போராட்டம்

(மன்னார்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் சுகவீன போராட்டத்தை நடத்தவுள்ளது.

இந்த தகவலை நேற்று முன்தினம் மன்னாருக்கு விஜயம் செய்த தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலர் த. மகாசிவம் வெளியிட்டார்.

இலங்கையின் பாடத்திட்டங்கள் யாவும் சிங்கள பௌத்த பேரினவாத அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. இதன் பின்னர் அவை தமிழ் தெரியாதவர்களால் மொழிப்பெயர்க்கப்படுகின்றன.

தமிழ் மொழிப் பாடசாலைகளுக்காக சிங்கள கோட்டக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். எனவே இதனை ஆட்சேபித்தே தாம் சுகவீன விடுமுறை போராட்டம் நடத்தவுள்ளதாக மகாசிவம் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்குக!

**அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சபாநாயகரிடம் கோரிக்கை**

கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களதும், பாதுகாப்பு சம்பந்தமாக யுத்தநிறுத்தக்கண்காணிப்புக் குழுவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும் என சிறிலங்கா வர்த்தக விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜே.வி.பியின் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகரவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் குறித்து கண்காணிப்புக்குழுவை அழைத்துப் பேசவேண்டும் என்றும், பாதுகாப்புப் படையினரால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்வதற்கே முடியும் என்பதால் கண்காணிப்புக் குழுவினரை அழைத்து விசாரிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்த வேண்டியது. சபாநாயகரின் பொறுப்பு எனக் கூறிய அமைச்சர், அதனால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் அவர் பேச வேண்டும் என்றும் கூறினார்.

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகரவை இலக்கு வைத்து குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகஜே.வி.பி. பாராளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ச நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்களையடுத்தே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பல அடக்குமுறைகளைத் தாண்டி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் தங்களால் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கும் முகம் கொடுக்க முடியும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

கட்சிபேதமின்றி வடக்கு-கிழக்கில் பணியாற்றும் மக்கள்பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் கடமை அரசாங்கத்திற்கு உள்ளதென ஜே.வி.பி பாராளுமன்றக் குழுத் தலைவர் விமல்வீரவன்ச தெரிவித்திருந்தார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் ஜயந்த வீரசேகரவை கொலை செய்யும் நோக்கிலேயே வந்ததாக தெரிவித்துள்ளார். இவ்வாறான செயற்பாடுகளால் ஜே.வி.பியின் பாதையை மாற்ற முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சபைமுதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பின் நடவடிக்கை தடைப்பட்டமை பாதிக்கப்பட்ட மக்களின் உரிமையை மீறும் செயல்

**- பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன்**

ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பின் நடவடிக்கைகள் தடைப்பட்டமையானது வடக்கு கிழக்கில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீறும் செயலாகும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் பொதுக்கட்டமைப்பு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஆழிப்பேரலை இணக்கத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கின் தமிழ் மக்களுக்கு பாரிய நிவாரணம் வழங்கப்படமுடிந்திருக்கும்.

எனினும் அது இடைநிறுத்தப்பட்டமையானது அந்த மக்களுக்கு பாரிய நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது.

பொதுக்கட்டமைப்பு இடைக்கால நிர்வாக சபைக்கு ஈடானது அல்ல. இதற்கு சனாதிபதியும் படையினரும் தமது உடன்பாட்டை வெளியிட்டனர்.

ஜே. வி. பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் பிரதிநிதிகளை தவிர ஏனையோர் இதற்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருக்கும் சனாதிபதியும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பலமும் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவாக உள்ளபோது நீதிமன்ற ஆணை பாரிய பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பின் செயற்பாட்டை தடுத்ததன் மூலம் ஜே.வி.பி தமிழ் மக்களுக்கான அவசியதேவைகளை மறுத்துள்ளது என்றும் சம்பந்தன் குற்றம் சுமத்தினார்.

# வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை குறைகிறது

**-மத்தியவங்கி அறிவிப்பு**

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வதில் பெண்களின் பங்களிப்பு குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டுச் சேவைக் காரியாலய அறிக்கையை மேற்கோள்காட்டி மத்திய வங்கி 2001 ஆம் ஆண்டு நாட்டின் அனைத்து வெளிநாட்டு வேலை பெற்றுள்ளோரில் 67 வீதமானவர்கள் பெண்கள் எனவும், அதேநேரம் 2002 இல்65 வீதம் எனவும் குறிப்பிட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கையானது 62 வீதமாக குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. 2004 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக்குச் சென்றுள்ள பணியாளர்களில் அதிகமானோர் பணிப்பெண்களே. அது மொத்த எண்ணிக்கையில் 52 வீதம் ஆகும்.

# மேல் கொத்மலை திட்டத்தை எதிர்த்து தலவாக்கலையில் உண்ணாவிரத போராட்டம்

மேல்கொத்மலை தண்ணீர் மறிப்பு திட்டத்தை எதிர்த்து தலவாக்கலையில் நேற்று முன்தினம் காலை ஏழு மணிக்கு உண்ணா விரதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேல் கொத்மலை திட்டத்தின் மூலம் மலையகத்தின் இன ஒற்றுமையை சிதறடிக்காதே என்ற பதாகையின் கீழ் நடைபெற்றுவரும் இந்த உண்ணா விரதத்தில் ஆறு இளைஞர்கள் ஈடுபட்டுள்ளார்கள். தலவாக்கலை நகர மத்தியில் உள்ள சுற்றுவட்டத்திற்கு அருகில் இந்த போராட்டம் நடத்தப்படுகிறது.

மேல் கொத்மலை திட்டத்தினால் சுற்றாடலுக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என்பதுடன் மக்களின் இருப்புக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைக்கும் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள மலையக இளைஞர் மன்றத்தின் தலைவர் சுதாகர் அகிம்சை போராட்டங்களுக்கு செவி சாய்க்காமையால் இன்று நாடு எதிர்நோக்கியுள்ள நிலைமையை மலையகத்தில் அரசாங்கம் ஏற்படுத்தி விடக்கூடாது என அவர் எச்சரிக்கை விடுத்தார்.

# ஜே.வி.பி விதித்த நிபந்தனை அரசாங்கத் தரப்பால் நிராகரிப்பு

பொதுக்கட்டமைப்பு உடன்படிக் கையை உடனடியாக இரத்துச் செய் தால் மாத்திரமே எதிர்வரும் சனா திபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந் திரக்கட்சியின் வேட்பாளருக்கு ஆத ரவை வழங்க முடியும் என்று ஜே.வி.பி விதித்த நிபந்தனையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

ஜே.வி.பி யினர் நிபந்தனை விதித்ததையிட்டு உரையாற்றிய சுதந் திரக்கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறி சேன, பொதுக்கட்டமைப்பு தொடர் பாக எந்தவித எதிர்ப்பு வந்தாலும், எந்தப் பெரிய கட்சிகள் எதிர்த்தாலும் சகல எதிர்ப்புக்களையும் முறியடித்து பொதுக்கட்டமைப்பை தொடர்ந்து முன்னெடுப்பதில் சனாதிபதி உறுதி யாக இருக்கிறார். எந்த சக்தியாலும் பொதுக்கட்டமைப்பை தடுத்துவிட முடியாது என்றார். இனப்பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பி யினர் கொண்டி ருக்கும் நிலைப்பாடு, இனப்பிரச்சி னையைத் தீர்த்துவைக்க எந்தக் கால கட்டத்திலும் உதவாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# இல.நிர்வாக சேவை போட்டிப்பரீட்சை விண்ணப்ப முடிவுத்திகதி நீடிப்பு

இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளதுடன் வயதெல்லையும் தற்போது உயர்த் தப்பட்டுள்ளது. பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் கடந்த 2005.07.01 ம் திகதி 1400 ஆம் இலக்க வர்த்தமானியில் மேற் படி பரீட்சைக்காக விண்ணப்பிக்க விதித்திருந்த நிபந்தனைகளில் சில மாற்றங்களை ஓகஸ்ட் ஐந்தாம் திகதி அமைச்சு வெளியிட்டுள்ள வர்த்த மானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2005.07.01 இல் வெளிவந்த வர்த்தமானியில் விண் ணப்பங்கள் யாவும் 2005.08.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக அனுப்ப வேண்டுமென்று கேட்கப்பட்டி ருந்தது. தற்போது விண்ணப்ப முடிவுத்திகதி 2005 ஓகஸ்ட் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக விண்ணப்பங்களை அனுப்பலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகளின் வய தெல்லை 22 வயதுக்குக்குறையாத வராகவும் 30 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டுமென் றிருந்த நிபந்தனை மாற்றப்பட்டு விண்ணபங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறுதித் திகதியன்று 32 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டுமென்று வய தெல்லை உயர்த்தப்பட்டுள்ளது.

# உலக வங்கியின் உதவியுடன் ஐந்து பாரிய நீர்ப்பாசனத்திட்டங்கள்

அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய தமிழர் தாயக மாவட்டங்களில் உலக வங்கியின் நிதி உதவியுடன் பாரிய நிர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கரைவாகுத்திட்டம், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுத் திட்டம், மட்டக்களப்பு மாவட்டத்தில் உறுகாமம் திட்டம், திருகோணமலை மாவட்டத்தில் அல்லைத்திட்டம், மன்னார் மாவட்டத்தில் ஜயன்ற் திட்டம் ஆகியவை செயற்படுத்தப்படவுள்ளன.

# சுனாமி நலன்புரி நிலைய பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்ட பொலிசார் மீது தாக்குதல்

**-பொலிசார், ஊர்காவல்படையாளியுடன் நால்வர் காயம்**

(கல்முனை)

கல்முனையில் நேற்றிரவு இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் சிறி லங்கா பொலிசார் ஒருவரும் ஊர்காவல் படையாளி ஒருவரும் மற்றும் இரு பொது மக்களும் நால்வர் படுகாய மடைந்து கல் முனை அஷ்ரப் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

கல்முனையில் உள்ள ரிவல் யெம் சுனாமி நலன்புரி நிலையத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது அங்கு பாதுகாப்பிற்காக நின்றிருந்த பொலிசார் மீது நேற்று முன்தினம் இரவு 10.10 மணியளவில் இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட் டுள்ளன.

இதன்போது 30 அகவையுடைய ஊர்காவல்படையைச் சேர்ந்த காமினி, 36 அகவையுடைய நிமால் சோமசிறி என்ற பொலிசாரும் மற்றும் நடராஜா சிவானந்தராஜா (அகவை 39), சுப்பிர மணியம் பார்வதி (அகவை 50) ஆகிய பொதுமக்களுமே படுகாய மடைந்துள்ளனர்.

இவர்கள் தற்போது கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

# அரசநிர்வாகத்தில் மோசடிகளை பரிசீலிக்க இரகசிய குழுக்கள் அமைப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள், அரசநிர்வாகங்களில் ஏற்படும் மோசடி சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு இரகசிய குழுக்களை ஐக்கிய தேசியக்கட்சி நியமித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியினர் தொழிற்சங்க பிரதிநிதிகளை இதற்கு நியமித் துள்ளனர். இவர்களுடன் அமைச்சின் செயலாளர்கள், சிரேஷ்ட அரச நிர்வாகி கள், ஐக்கியதேசியக்கட்சி தொழிற்சங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர். இங்கு சேகரிக்கப்பட்டுள்ள சகல மோசடி விபரங்களையும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் ஐக்கிய தேசியக்கட்சி மேற் கொண்டுள்ளது.


# கேள்வி அறிவித்தல்

*மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.*

## சீருடைத்துணிகள் வழங்குதல்-2005

எமது பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்கு சீருடைத்துணி வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது. இதனுள் பின்வரும் நிறத்திலான துணிகளுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| 01) 45" வெள்ளை மேலங்கித் (சேட்) துணி | -140மீ. |
| 02) 45" கிறீம்(இளமஞ்சள்) மேலங்கித் (சேட்) துணி | -327மீ. |
| 03) 60" வெள்ளை காற்சட்டைத் (ஜீன்ஸ்) துணி | - 56மீ. |
| 04) 60" கிறீம் (இளமஞ்சள்) காற்சட்டை(ஜீன்ஸ்)துணி | -142மீ. |
| 05) 36" வெள்ளை கேம்பிறிஜ் துணி | -08 மீ. |
| 06) 60" காக்கி காற்சட்டை (ஜீன்ஸ்)துணி | -420மீ. |
| 07) 60" நீலக் காற்சட்டை (ஜீன்ஸ்)துணி | -11மீ. |
| 08) 45" இளநீல மேலங்கித் (சேட்) துணி | -09மீ. |

தங்களால் அனுப்பப்படும் விலைகோரல் விண்ணப்பத்துடன் துணி தரத்தின் தன்மையையும் குறிப்பிட்டு மாதிரி துணிவகைகளை இணைத்து 31.08.2005 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். 31.08.2005 காலை 10.30 மணியளவில் கேள்வி திறக்கப்படும். மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அலுவலகநேரத்தில் அறிந்துகொள்ளமுடியும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம:-0212285932
0212285933

(சி.12516)

*மா.சு.சே.பி.பணிப்பாளர்,*
*கிளிநொச்சி.*



# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

கருவில் 1974 * 05 * 21



வித்தாய் மண்ணில் 2003 * 08 * 13

## மேஜர் கருவேலன் (அருள்ராஜ்)

மரணம் என்பது மனிதனில் புரைந்தாலும்
மாவீரர் என்று நீ மண்ணில் விதையானாலும்
மண் விடியும் நேரம் தான் நீ இல்லையே
அன்புத் தெய்வமே உன் ஒளி அணைந்து ஆண்டுகள்
இரண்டு
ஆனாலும் உன்ஒளியில் உன் நினைவாய் நான்
வாழ்கின்றேன்

2005.08.13 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு போராளிகள், காவல்துறை உறுப்பினர்கள் மற்றும் உற்றார், உறவினர் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

என்றும் உன் பாசமிகு
மனைவி
அ.ஜெயந்தா
7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

(6199)



# 5 ஆம் ஆண்டு நினைவலைகள் 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 1981 * 12 * 22



தாயக மண்ணில் 2000 * 08 * 01

தாயின் மடியில் 1985 * 04 * 01



தாயக மண்ணில் 2001 * 08 * 13

## வீரவேங்கை கடல் காவலன்
இரத்தினசிங்கம் பவீந்திரன்

## வீரவேங்கை யசீந்தன்
இரத்தினசிங்கம் யசிந்தன்

தாமரை வீதி
வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்.

எம் இதயம் அழுவதும் அலைகள் அடிப்பதும்
உங்கள் இரு வதனமுகங்கள் பார்ப்பதற்காகவே
ஆண்டுகள் ஐந்து, நான்கு ஆனாலும் ஆறாத்துயருடன்
மீள நினைவுகளை மீட்டும்

இவர்களுடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூ[illegible]றோம்

தகவல்:-
இ.பவிதா
ஆயப்பகுதி
புளியங்குளம்

(6523)

குடும்பத்தினர்
த.முகவரி
மாவீரர் துயிலுமில்லம் அருகாமை,
முழங்காவில்.

# டில்லி கலவரத்திற்காக வெட்கித் தலை குனிகிறேன்

## -மன்மோகன்சிங்

நானாவதிஆணைக்குழு அறிக்கை தொடர்பாக மத்தியரசு மீது மாநிலங் களவையில் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மான விவாதத்திற்குப் பதிலளித்து பிரதமர் மன்மோகன் சிங் பேசினார்.

அப்போது அவர் டில்லி கலவரத் தில் 4000 சீக்கியர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கல வரத்துக்காக நான் வெட்கித் தலை குனிகின்றேன் என்று உருக்கமாகக் கூறினார்.

1984 இல் அப்போதைய இந் தியப் பிரதமர் இந்திராகாந்தி படு கொலை செய்யப்பட்டதைத் தொடர் ந்து டில்லியில் சீக்கியர்களுக் கெதிராக நடந்த கலவரம் பற்றி விசா ரணை நடத்திய நானாவதி ஆணைக் குழு அறிக்கை தாக்கல் செய்திருந் தது. இந்த அறிக்கை தொடர்பாகவும், இந்த அறிக்கை மீது மத்தியரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை தொடர்பாகவும் மாநிலங் களவையில் மத்தியரசைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் தீர்மானம் கொண்டுவந்தன.

இவ்விவாதத்திற்குப் பதிலளித்து பிரதமர் மன்மோகன்சிங் பேசிய தாவது; நாட்டுக்குப் பெரும் விளைவு களை ஏற்படுத்தக் கூடிய பிரச்சினை பற்றி இந்த அவை இப்போது விவா தித்துக்கொண்டிருக்கிறது. 1984 இல் டில்லியில் சீக்கியர்களுக்கெதிராக நடந்த கலவரத்தில் 4000 பேர் கொல் லப்பட்டுள்ளனர்.

இது போன்ற கோரமான சம்பவங் கள் இனியும் நடக்காதவாறு இருக்க நாம் சிந்திக்க வேண்டிய நேரம் இது. இந்திராகாந்தி படுகொலை ஒரு தேசத் துயரம் என்றால் அதைத் தொடர்ந்து நடந்த சீக்கியர் படுகொலை ஒரு தேசிய அவமானம் ஆகும். இதில் நான் போலிகௌரவத்துடன் நிற்கப் போவதில்லை. டில்லிக் கலவரத்துக் காக நான் வெட்கித் தலைகுனிகி றேன்.

நாட்டின் நிகழ்வுகளில் ஏற்றம் இறக்கம் இருக்கும். கடந்த காலத்தை நாம் மீண்டும் உருவாக்க முடியாது. அதேசமயம் நாம் அனைவரும் ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக் கும் திறமையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மக்கள் அனை வரும் கௌரவத்துடன் வாழும் உரிமை வழங்கப்படவேண்டும்.

சீக்கியர் சமுதாயம் மகோன்ன தமான மரபுகளைக் கொண்டது. அது தேசிய நீரோட்டத்தில் கலந்தது.

பஞ்சாப்பின் வளத்திற்கு பெரும் பங்காற்றியிருக்கிறது. அந்த சமுதா யத்தின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி நாம் இப்போது சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். நானா வதி ஆணைக்குழு அறிக்கையில் காங்கிரஸ் உயர்மட்டத் தலைவர்கள் யார்மீதும் குற்றம் சாட்டப்பட வில்லை. கடந்த 21 ஆண்டுகளாக அது பற்றிப் பரப்பி வந்தபொய்க்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது.

நானாவதி ஆணைக்குழு பெயர் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டியுள்ள அனைவர் மீதும் மேற்கொண்டு விசார ணை அல்லது மறுவிசாரணை நடத் தப்படும். குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரிகளில் பலர் ஓய்வு பெற்றுவிட்டதால் சட்டத்திற்குட்பட்டு அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை அரசு செய்யும் எனத் தெரிவித்தார்.



இந்திய சுதந்திர தினம் நெருங்குவதையொட்டி மும்பையில் உள்ள தையலாளர் ஒருவர் இந்திய தேசியக்கொடியை தைக்கும் காட்சி

# இந்தியாவில் சுதந்திரதின பாதுகாப்பு அதிகரிப்பு டில்லியில் வெடிகுண்டுகளுடன் தீவிரவாதிகள் கைது

டில்லியில் துப்பாக்கி தோட்டாக்கள் மற்றும் வெடி குண்டுகளுடன் தீவிரவாதிகள் கைது செய்யப் பட்டார்கள். டில்லியில் சுதந்திர தினவிழாவில் குண்டு வைக்க அவர் கள் சதித்திட்டம் தீட்டினார்களா என்பது பற்றி பொலிஸ் விசாரணை நடத்திவருகிறது.

நாளை மறுதினம் இந்தியா முழுவதும் சுதந்திரதின விழா கொண்டாடப்படுகிறது.

டில்லி செங்கோட்டையில் பிரதமர் மன்மோகன்சிங் கொடி ஏற்றி வைத்து சுதந்திரதின உரை ஆற்றவுள்ளார். அதில் முக்கிய பிரமுகர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொள்ள ஏற்பாடாகியிருக்கிறது.

இதையொட்டி செங்கோட்டையிலும், டில்லி நகரிலும் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று செங்கோட்டைக்கு மேலாக விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டிருக்கிறது. டில்லிக்கு வரும் வாகனங் கள் அனைத்தும் சோதனை இடப்படவுள்ளன.

இந்த நிலையில் உத்தரபிரதேச மாநிலம் மீரட் நகரில் இருந்து டில்லியில் உள்ள நபருக்கு வெடிகுண்டுகள் வருவதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்தது. அப்போது 'ரோஹில்லா' என்ற இடத்தில்சோதனை நடத்திய பொலிசார் ஒரு காரை தடுத்து நிறுத்தினார்கள்.

அதில் இரண்டு வெடிகுண்டுகள் மற்றும் 1840 துப் பாக்கி தோட்டாக்கள் பதுக்கி வைத்திருந்ததைப் பொலி சார் கண்டுபிடித்தனர்.

அவற்றைப் பொலிசார் கைப்பற்றி அந்தக்காரில் இருந்த நான்குபேரையும் கைது செய்தனர். அவர்கள் யார்? வெடிகுண்டுகளை யாருக்கு கடத்தி வந்தனர்? சுதந்திர தினத்தில் வெடிகுண்டுகளை வெடிக்க திட்டமிட்டு இருந் தார்களா? என்று அவர்களிடம் பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதற்கிடையில் சதீஸ்கர் மாநிலம் மகாசமூந்த் என்ற இடத்தில் மூன்று தீவிரவாதிகளைப் பொலிசார் கைது செய்தனர். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் உத்தரப்பிரதேசத்தில் மேலும் ஒரு தீவிரவாதியைப் பொலிசார் பிடித்தனர் என இந்திய செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

ஆசிரியர் தேவை

கிளி/கிளிநொச்சி ம.வியில் ஆரம்பப் பிரிவில் கற்பிப்பதற்காக ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். க.பொ.த(உ/த) சித்தியடைந்த வர்கள் விண்ணப்பிக்கலாம். கல்வித்தகைமைச் சான்றிதழ்களுடன் 18.08.2005 வியாழன் காலை 9.00 மணிக்கு நேரில் வரவும் சம்பளம் பேசித்தீர்மானிக்கவும்.

செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(சி- 12522)


# 50 இலட்சம் செலவானாலும் பரவாயில்லை சங்கரராமனைக் கொல்லுங்கள் என்றார்

## -ஜெயேந்திரருக்கு எதிராக ரவி சுப்பிரமணியம் சாட்சியம்

சங்கரராமன் கொலைவழக்கில் அரச தரப்பு சாட்சியாக மாறியுள்ள ஒப்பந்தக்காரர் ரவி சுப்பிரமணியம் ஜெயேந்திரர் பற்றி சைதை நீதி மன்றில் இரண்டுமணிநேரம் சாட்சிய மளித்துள்ளார் அப்போது அவர் ரூபா 50 இலட்சம் செலவானாலும் பரவா யில்லை சங்கரராமனை எவ்வாறா யினும் கொலை செய்யும்படி தனக்கு ஜெயேந்திரர் கூறியதாக பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தொடர்ந்து குறிப்பிடுகையில்; 2000ஆம் ஆண் டில் ஆந்திராவைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் ஜெயேந்திரர் அறை யொன்றில் தனியாக இருந்தார். நான் வெளியில் அமர்ந்து இருந்தேன். திடீரென ஜெயேந்திரர் வெளியே ஓடி வந்து தொழிலதிபர் ஒருவரின் மனைவி என்னைப்பார்க்க வருகிறார். எனவே ஆந்திரப்பெண்ணை உன் மனைவி என்று கூறு என்றார். அதன்படி நானும் அந்த பெண்ணின் கணவன் போல நடித்தேன். இதனால் எனக்கு நிறைய ஒப்பந்தம் வழங்கினார். பெரியவரின் மூன்று பிறந்தநாள் விழாவில் நான் கலந்து கொண்டு அவருக்கு ரூபா நான்கு இலட்சம் மதிப்புள்ள தங்க கிரீடம், தங்க நகைகள் என்பவற்றைப் பரிசாகக் கொடுத்து இருக்கிறேன்.

கடந்த செப்முதலாம்திகதிஅன்று நானும் அப்புவும், கதிரவனும் பெரியவர் அழைத்ததால் சங்கரமடம் சென்றோம். அங்கு பெரியவர் கையில் சங்கரராமன் எழுதிய இறுதி அறிவிப்புக் கடிதம் இருந்தது. அதைக்காட்டி இனிமேல் இவன் இருக்கக்கூடாது. தீர்த்துக்கட்டுங்கள். அதற்கு 50 இலட்சம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை என்று கூறினாரென ரவி சுப்பிரமணியம் தனது சாட்சியத்தில் கூறினார்.


தமிழீழ மாவட்ட நீதிமன்று - செயபுரம்

வழ/இல:- 124/05
தன்மை:- மணநீக்கம்

வழக்காளி:-
சூரியகுமார் தர்சினி
வித்தி குடியிருப்பு,
நாச்சிக்குடா
எதிர்
சிங்கமுத்து சூரியகுமார்
அம்பலப்பெருமாள் சந்தி,
அக்கராயன்.
- எதிராளி

பகிரங்க அறிவித்தல்

மேலே பெயர் முகவரியிடப்பட்ட எதிராளிக்கு நீர் வழக்காளியையும் உமது பிள்ளையையும் கைவிட்டு வன்மஉறவுறுப்புச் செய்து வாழ்வதால் இவ்வழக்கினை வழக்காளி தாக்கல் செய்தபோது உமக்கு மன்று வழக்கறிக்கை, அழைப்பாணை என்பவற்றை சேர்பிக்க நடவடிக்கை எடுத்தும் அவ்விதம் சேர்பிக்க முடியாமையால் உமது வழக்குத் தொடர்பில் நீரோ, உமது நிலையில் அக்கறையுடைய வேறு எவருமோ மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்க ஏதுவாக மன்று உமக்கு ஓர் சந்தர்ப்பம் வழங்கி 13. 03. 2005 அன்று பகிரங்க அறிவித்தலை ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரித்தும்நீர் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமையால் மன்று சட்டப்படி வழக்காளியின் கோரிக்கைகளை ஆராய்ந்து ஒரு முகவிளக்கம் மேற்கொண்டு ஒரு முகத்தீர்ப்பு வழங்கியதற்கு அமைவாக இடைக்காலத்தீர்வை பதியப்பட்டு அத்தீர்வை இவ்வறிவித்தலுடன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றது. எனவே இதில் உமக்கு ஏதும் ஆட்சேபனைகள்இருப்பின் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து 03 மாதங்களிற்குள் மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்க மன்று மீண்டும் சட்டப்படி சந்தர்ப்பம் தருகின்றது. தவறின் இத்தீர்வை முற்றான தீர்வையாகப் பதியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

ப.திருக்குமார்
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று
மன்னார்,
செயபுரம்.

திரு. இரா.சரவணபவானந்தன்
வழக்காளி சட்டத்தரணி

(சி-12500)



கடை கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு

யாழ். வீதி கனகராயன் குளத்தில் நான்கு கடைகளைக்கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு:-

தொடர்புக்கு:-
வடக்கு கிழக்கு கிராமிய அபிவி ருத்தி சேவைகள் (தனியார்) நிறுவனம்
கனகபுரம் பாடசாலை அருகாமை கிளிநொச்சி.

T.P.021-2285023 (சி-12552)



தமிழீழ மாவட்ட நீதிமன்று - செயபுரம்

வழ/இல:- 124/05
தன்மை:- மணநீக்கம்

வழக்காளி:-
சூரியகுமார் தர்சினி
வித்தி குடியிருப்பு,
நாச்சிக்குடா
எதிர்
சிங்கமுத்து சூரியகுமார்
அம்பலப்பெருமாள் சந்தி,
அக்கராயன்.
- எதிராளி

இடைக்காலத் தீர்வை

இந்த 2005ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 16ஆம் நாள் மன்றின் நீதியாளர் திரு. த. கதிர் அவர்கள் முன்னிலையில் மன்றினால் வழங்கப்பட்ட ஒருமுகத்தீர்ப்பின்படி, இவ்வழக்கின் வழக்கறிக்கை அழைப்புக்கட்டளை என்பவற்றை எதிராளிக்கு சேர்ப்பிக்க மன்று நடவடிக்கை எடுத்தும் அது பயன் அளிக்காமையால் 13. 03. 2005 அன்று பத்திரிகையில் பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டும் எதிராளியோ அல்லது அவர்சார்பில் அக்கறையுடைய எவருமோ மன்றில் நடவடிக்கை எடுக்காமையால் வழக்காளியின் உரிமைக்கோரிக்கைகளை மன்று ஏற்று வழங்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் இடம்பெற்ற திருமணஉறவை நீக்கி 1614ஆம் இலக்க திருமணப்பதிவை இரத்துச் செய்தும் வழங்காளியுடன் இருக்கும் சியாழினி என்ற பெண் குழந்தை தொடர்ந்தும் வழங்காளியுடனே வளரவேண்டும் என்றும் சியாழினி என்ற பெண்குழந்தைக்கு அதன் எதிர்கால நலன்கருதி எதிராளி 150000 ரூபாவை மன்றினால் அனுமதிக்கப்படும் வைப்பகத்தில் வைப்பிலிடவேண்டும் என்றும் வழக்காளியின் 05 பவுண் நகைகளையும் எதிராளி வழங்காளிக்கு செலுத்தவேண்டும் என்றும் வழக்காளிக்கு பிரிவினைப்பணமாக 100000ரூபா எதிராளி செலுத்த வேண்டும் எனவும் வெளிப்படுத்தி இடைக்காலத் தீர்வை பதியப்படுகின்றது.

த.கதிர்
நீதியாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
மன்னார்,
செயபுரம்.


வரைந்தவர்
திரு. இரா.சரவணபவானந்தன்
வழக்காளியின் சட்டத்தரணி

(சி-12551)

# சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம்

# உதவ முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது!

### விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா



தமிழர் தாயகத்தில் முதன்மை விளையாட்டாக உதை பந்தாட்டத்தை நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம். இதன் அபிவிருத்தி பணிகளில் உதவுவதற்கு தாங்கள் முன்வந்திருப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது என தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் மணிலால் பொணாண்டே சிறிலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் திலினாபண்டிதரத்தின மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி கிறிஷாந்தபெரேரா ஆகியோருடன் மடுவில் இடம் பெற்ற சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; சிறிலங்கா அரசும்,சிங்கள பேரினவாத அரசியல் கட்சிகளும் சுனாமி மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வை கட்டயெழுப்பும் மீள்கட்டுமான பணிகளுக்கு மிகப் பெரும் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். ஆனால் எமது தேசியத் தலைவர் மிகச்சரியான கட்டமைப்பொன்றை உருவாக்கி எமது மக்களின் மீள் கட்டுமானப் பணிகளை சரியான திசையில் வழிநடத்தி வருகின்றார். இந்தக் கட்டமைப்பின் ஊடாக இன்று பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் எமது மக்களுக்கான கட்டுமானப் பணிகளை வினைத்திறனுடன் செயற்படுத்தி வருகின்றன. சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நடவடிக்கைகளையும் எங்களுடைய இந்த கட்டுமானத்தின் ஊடாக செயற்படுத்து வற்கும் தாங்கள் முன் வந்திருப்பது எமக்கு மிக மகிழ்ச்சியளிக்கின்றது எனவும் தெரிவித்தார். இச் சந்திப்பின் போது தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அன்ரன அன்பழகன், தமிழீழ தேசிய தொலைக்காட்சி ஆங்கில செய்திப் பிரிவு இணைப்பாளர் யோகன், இளையோர் செயற்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் விஜி, மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உதைபந்தாட்ட அபிவிருத்திக்காக உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு உதைபந்தாட்ட அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக தொடர் பயிற்சிகளையும், மத்தியஸ்தர் பயிற்சிகளையும் வழங்குவதற்கு உதைபந்தாட்ட சம்மேளனத்தினர் சம்மதம் தெரிவித்தனர். அத்தோடு வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் யாழ்ப்பாணம்,பருத்திதுறை,மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களில் ரூபா 15 கோடி பொறுமதியான மைதானங்களை இளையோர் செயற்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து அமைப்பற்கு சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் முன் வந்துள்ளது என்பதும் இச்சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது,

## உழவர் ஒன்றிய வி.க நடாத்தும் கரப்பந்தாட்ட, உதைபந்தாட்டப்போட்டி

அமரர் இராசகதிரவேலு பத்மேஸ்வரன் (சிவா) ஞாபகார்த்தமாக உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கு கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிக்கு ஒரு கழகத்தில் இருந்து இரு அணிகள் மட்டுமே பங்குபற்றலாமெனவும், பதிவுகளை உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தில் மேற்கொள்ளலாம் எனவும், விண்ணப்பங்களை எதிர்வரும் 20 -ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேற்படி கழகம் கோரியுள்ளது.

இப்போட்டித் தொடரில் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட அணிகள் மட்டுமே பங்குபற்றலாம் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.




## நியூசிலாந்துடன் மேலும் ஒரு டெஸ்ட்; மேற்கிந்தியத்தீவுகள் அணி சம்மதம்



நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள்அணி மூன்று டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கும் என நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

தற்போது சிம்பாப்பேக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு விளையாட வரும் நியூசிலாந்து அணி அங்கு நடைபெறவுள்ள முக்கோண ஒருநாள் போட்டித் தொடரிலும் கலந்து கொள்ளவுள்ளது.

இதனை அடுத்து சிம்பாப்பே அணி நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்யத்திட்டமிட்டிருந்தது. இதற்கு நியூசிலாந்து அரசு தடைவிதித்துள்ளது.

நியூசிலாந்து அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடத் திட்டமிட்டிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, சிம்பாப்வே அணியுடனான சுற்றுப் பயணம் இரத்தானதால் மேலும் ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாட கேட்டதற்கமைய சம்மதம் தெரிவித்துள்ளது.

எனவே, இரு அணிகளும் மூன்று டெஸ்ட் போட்டியிலும், ஐந்து ஒருநாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளதாக நியூசில்ாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## மூன்றாவது டெஸ்ட் இங்கிலாந்து அபாரம் நெருக்கடியான நிலையில் அவுஸ். அணி





இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி நெருக்கடியான நிலையை அடைந்துள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி இங்கிலாந்தின் ஓல்ட் ட்ரப் பார்ட் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோன் முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

இதற்கு அமைய முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி மைக்கல் வோனின் அபார சதத்தின் மூலம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 444 ஓட்டங்களைப் பெற்று ஸ்திர நிலையை அடைந்துள்ளது. இதில் வோன் 166 ஓட்டங்களையும், ட்ரஸ் கொதிக் 63 ஓட்டங்களையும் மற்றும் பிளிண்டொப், ஜோன்ஸ் தலா 46, 42 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஷேன் வோர்ன், பிரட்லீ தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர். இதில் ஸ்டிரஸின் விக்கெட்டை கைப்பற்றிய பிரட்லீ டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 150 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவுஸ் அணியின் நட்சத்திரப் பந்து வீச்சாளர் மெக்ராத் 25 ஓவர்கள் பந்து வீசி 86 ஓட்டங்கள் கொடுத்து விக்கெட் எதனையும் கைப்பற்றவில்லை.

பதிலுக்கு முதலாவது இனிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில், ஹெய்டன் 34, லங்கார் 31, கில்கிறிட்ஸ் 30 ஓட்டங்களையும் பெற்றனர். வோர்ன் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார். பந்து வீச்சில் கலிஸ், ஜோன்ஸ் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர்.

## ஆபிரிக்கா—ஆசிய கிரிக்கெட் தொடர்

## ராவிட்டுக்குப் பதில் கங்குலி?



தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள ஆபிரிக்கா-ஆசிய கிரிக்கெட் ஒரு நாள் போட்டித்தொடரில் இருந்து ராகுல் ராவிட் விலகியுள்ளார். இவருக்குப் பதிலாக கங்குலி இணைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்னாபிரிக்காவில் ஆபிரிக்கா-ஆசிய கிரிக்கெட் ஒரு நாள் போட்டித் தொடர் இம்மாதம் நடைபெறவிருக்கிறது. ஆகஸ்ட் 17,20,21 ஆகிய திகதிகளில் போட்டிகள் நடைபெறும்.


தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, கென்யா அணிகளைச் சேர்ந்த ஆபிரிக்கா வீரர்கள் ஒருபக்கமும் அதை எதிர்த்து ஆசிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் அணியும் இதில் மோதுகின்றன. இந்திய வீரர்கள் ராவிட், சேவாக், இர்பான் பதான் ஆசியஅணிக்கு சேர்க்கப்பட்டிருந்தார்கள். தலைவராக இன்சமாம் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இப்போது இந்திய வீரர்கள் மூன்று பேரில் இரண்டு பேர் இப்போட்டியில் விளையாடாமல் விலகி இருக்கிறார்கள். குடும்ப சூழ்நிலை காரணமாக நான் தென் ஆபிரிக்காவுக்கு போக இயலாது என்று ராவிட் திடீரென அறிவித்திருக்கிறார். இதை இந்திய கிரிக்கெட்சபை செயலாளர் எஸ். கே. நாயர் நேற்று முன்தினம் உறுதி செய்தார்.

இந்திய பந்து வீச்சாளர் இர்பான் பதான் தற்போது காயம் அடைந்திருப்பதால் அவரும் இப்போட்டியில் விளையாடவில்லை. அதுபோல இலங்கை பந்துவீச்சாளர் சமிந்தாவாசும் காயம் காரணமாக விலகிவிட்டார்..

இந்தப் போட்டியில் என்னை ஏன் ஆசிய அணிக்குச் சேர்க்கவில்லை என்று கங்குலி சில நாட்களுக்கு முன் வருத்தப்பட்டு பேட்டியளித்தார். எனவே ராவிட்டுக்கு பதிலாக அவர் சேர்க்கப்படலாம் எனத் தெரிகிறது.

## மூன்றாவது சுற்றுக்கு நடால், ஆகாசி முன்னேற்றம்



மொன்றியில் நடைபெற்றுவரும் ரோஜர்ஸ் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ரபெல் நடால்,அகாசி ஆகியோர் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டி கனடாவிலுள்ள மொன்றியில்நடைபெற்று வருகின்றது. இதன் இரண்டாவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதல் நிலை வீரரும், ஸ்பெயின் வீரருமான ரபெல்நடால், ரிக்கார்டோ மெலோவை எதிர்த்து ஆடினார். இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி ஆடிய நடால் 6-1,6-2 என்ற நேர்செட் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் அமெரிக்க வீரர் அகாசி, பிஜோர்க்மெனை எதிர்த்து ஆடினார். பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் ஆகாசி 6-1,3-6,6-2 என்ற கணக்கில் வெற்றிபெற்றார்.

மற்ற ஆட்டங்களில் நிக்கோலா, காஸ்டன் கவுடியா, கரோல்பெக், தாமஸ் ஜோகன்சன், செபஸ்யான் குரோஜியான், டோம்னிக் ஆகியோர் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றனர்.

## வோர்ன் புதிய சாதனை



அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 600ஆவது விக்கெட்டை கைப்பற்றிய முதல்வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இங்கிலாந்தின் ஓல்ட் ட்ரப்பார்ட் மைதானத்தில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ரெஸ்க் கொதிக்கின் விக்கெட்டைக்கைப்பற்றியதன் மூலம் இச்சாதனையை வோர்ன் புரிந்துள்ளார்.

## சிந்தனைக்கு



குட்டக் குட்டத் தலைகுனிந்து அடிமைகளாக, அவமானத்துடன் வாழ்ந்த தமிழனைத் தலைநிமிர்த்தி- தன்மானத்துடன்- வாழவைத்த பெருமை எமது விடுதலை இயக்கத்தையே சாரும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13.08.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மறைமுக யுத்தம் தொடரும்!

விடுதலைப்புலிகளுக்கு எதிரான மறைமுக யுத்தத்தை நடத்தியே தீருவோம் என்பதில் சிறிலங்கா அரசாங்கம் உறுதியாகவே உள்ளது. அவ்வாறு இல்லாதுவிட்டால் அரசாங்கம் கருணாகுழுவின் ஆயுதங்களைக்களையும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டாது என அரசின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்திருக்கமாட்டார்.

கருணா குழுவினரின் ஆயுதங்களைக் கள்ளவதற்காக வனப்பகுதிக்குள் அரசாங்கப்படைகள் செல்லுமானால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். தமிழீழ விடுதலைப்புலிகளையும் கருணா குழுவினையும் இனங்காண முடியாத சூழ்நிலையில் இது முழுமையாக போர்நிறுத்த உடன்பாட்டையே பாதிக்கக்கூடிய பிரச்சினையாகும் என ஜயந்ததனபால அரசின் நிலைப்பாட்டிற்கு ஒருவிளக்கமும் அளித்துள்ளார்.

சமாதானச் செயலகப்பணிப்பாளர் ஓர் அரசியல்வாதியா? அன்றி அதிகாரியா? எவ்வாறாயினும் இவ்வாறு அவர் சிறுபிள்ளைத் தனமாகப் பேசுவார் என எவருமே எதிர் பார்த்திருக்க மாட்டார்கள். ஏனெனில் கருணாகுழு பற்றி அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் ஒருபுறத்தில் சமாதானச் செயலகம் சமாதானத்தில் கொண்டுள்ள அக்கறை குறித்துக் கேள்வி எழுப்பவும் அதேவேளை, மறு புறத்தில் களநிலவரத்தையும் புரிந்துகொண்டு பேசுவதாகவும் தெரியவில்லை.

கருணா குழுவின் ஆயுதங்கள் களையப்படப்போவதில்லை. ஏனெனில் கருணாகுழு போர்நிறுத்தத்திற்கு முன்பாக இராணுவத் துணைப்படையாக இருந்ததில்லை என்பது அவருடைய வாதம். இவ்வாதத்தின் மூலம் ஜயந்ததனபால இரண்டு விடயங்களை தம்மை அறியாமலே முன்வைப்பது போலுள்ளது.

ஒன்று, யுத்த நிறுத்தத்தை முறியடிப்பதற்காக அரசாங்கம் புதிதாக ஆயுதக்குழு ஒன்றை உருவாக்கலாம். ஆனால் அதற்காக அரசாங்கம் பொறுப்பு ஏற்க வேண்டியதாக இல்லை. ஏனெனில் புதியதொரு துணைப்படை யுத்த நிறுத்த முறிவிற்கு காரணமானால் அரசாங்கம் அதற்குப் பொறுப்பில்லை என்பதே கருணா குழு தொடர்பாக அவர் அளித்துள்ள விளக்கம் வெளிப்படுத்தும் ஒன்றாகும்.

இரண்டாவது விடுதலைப்புலிகள் தவிர்ந்த எவரும்: எந்தக்குழுவும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் செயற்படலாம். அவர்கள் மீது சிறிலங்கா ஆயுதப்படையினர் எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போவதில்லை என்பது. இதில் விடுதலைப்புலிகள் மீது அவர்கள் தாக்குதல் மேற்கொண்டாலும் அது பொருட்படுத்தப்படமாட்டாது என்பதும் அடங்கும்.


சமாதானச் செயலகப் பணிப்பாளரின் பேச்சில் அடங்கியுள்ள மற்றொரு விடயம், கருணா குழு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இல்லை என்பதும், அவர்களைத் தேடிச்சென்றால் புலிகளுடன் மோதல்கள் வெடித்துவிடும் என்பதுமாகும். இதன் மூலம் ஜயந்ததனபால யுத்தநிறுத்த உடன்பாட்டையும்சரி, கள நிலவரத்தையும் சரி சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்தியுள்ளார்.

ஏனெனில் விடுதலைப்புலிகள் மீது கருணா குழுவின் பெயரில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் 90 வீதத்திற்கு மேற்பட்டவை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம் பெற்றுள்ளன. அது மட்டுமன்றி தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகள் யாவும் இராணுவத்தினரின் நேரடிக் கண்காணிப்பில்-குறிப்பாக இராணுவ நிலைகளில் இருந்து ஒரு சில நூறு மீற்றர்களை மட்டுமே தூரமாகக் கொண்ட பகுதிகளிலேயே இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்கள் ஏதோ இராணுவத் தரப்பின் வீச்சிற்கு அப்பாற்பட்ட இடங்களில் நடப்பது போன்று ஜயந்தனபால பேசுவது களநிலவரத்தை அவர் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. அதாவது, இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியிலேயே போர்நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுவருகின்றது என்பதை அவர் விளங்கிக்கொள்ளவில்லை போல் உள்ளது.

அடுத்ததாக கருணாகுழுவைத் தேடிச் சென்றால் யுத்தநிறுத்தம் பாதிப்பிற்கு உள்ளாகிவிடும் என அவர் கூறுவது வேடிக்கைக் குரியதொன்று. ஏனெனில் கருணாகுழு இராணுவத்தின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இருப்பதால் அங்கு தேடுதல் நடத்துவது எவ்வாறு போர்நிறுத்த மீறலாகிவிடும்?. புலிகள் பகுதிக்குள் இராணுவம் புகுந்தால் மட்டுமே அது யுத்தநிறுத்த மீறல் ஆகும்.ஆனால் புலிகள் பகுதிக்குள் கருணா குழு இருப்பின் அவர்களை இராணுவம் தேடிவரத் தேவையில்லை. விடுதலைப்புலிகள் என்றோ அப்பிரச்சினைக்கு முடிவு கண்டிருப்பார்கள். இதனைக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுக்கொண்டும் இருக்க மாட்டார்கள்.

ஆகையினால் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவின் கூற்றுக்கள் அரசாங்கம் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு ஏற்ப நடந்துகொள்ளத் தயாராக இல்லை என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அத்தோடு ஜயந்ததனபாலவும் முழு அளவிலான அரசியல்வாதி போன்று உள்ளார். அது மட்டுமன்றி இராணுவத்துடன் இயங்கும் துணைப்படைகளை பழையது, புதியது எனப் பிரிப்பதும், புதியவை தொடர்பாக எமக்குப் பொறுப்பில்லை என ஜயந்ததனபால பேசுவதும் அரசாங்கம் யுத்தத்தை நோக்கிச் செயற்படுவதை நிருபணம் செய்வதாகவே உள்ளது.




## ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்பாட்டை பாராளுமன்றில் இலகுவாக நிறைவேற்றலாம்

### - கூட்டமைப்பு பா.உ. இரா.சம்பந்தன்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையை சிறிலங்கா பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெருபான்மையுடன் மிக இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள முடியுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரண சபை மீது பாராளுமன்றத்தில் நடைபெற்ற இருநாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய இரா.சம்பந்தன், ஜாதிகஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி.உறுப் பினர்கள் தவிர்த்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மிக இலகுவாக அதனை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்றார்.

சில ஜாதிகஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் தவிர்த்து ஏனைய அனைத்து உறுப்பினர்களும் ஆழிப்பேரலை நிவாரண சபையை ஆதரிக்கின்றனர். ஐக்கிய தேசியக்கட்சி தனது நிலைப்பாட்டை தெளிவாக கூறிவிட்டது. இதனை அமுல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் ஆர்வத்தை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார்.

அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களின் நிலைப்பாட்டை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்துவார்கள் என நாம் நம்புகிறோம்.அப்போது ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு பாராளுமன்றத்தின் ஆதரவு உள்ளது என்பதை பொதுமக்கள் தெரிந்துகொள்வார்கள்.

ஆழிப்பேரலை நிவாரண சபையை எதிர்த்து ஜே.வி.பி.யின் 39 பாராளுமன்ற உறுப்பினர்களும் உயர்நீதிமன்றம் சென்றதன் மூலம் அவர்கள் ஏனைய பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களினதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியினதும் எண்ணப்பாட்டிற்கு முரணாக செயற்பட்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களுக்கான நிவாரணத்தை அவர்கள் மறுத்துள்ளனர். ஆழிப்பேரலை போன்றதொரு சிறிய நிர்வாகக் கட்டமைபபைக்கூட நடைமுறைப் படுத்தாத சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை எப்படி பெற்றுத்தரப் போகிறார்கள் என்ற சந்தேகம் தமிழ் மக்களிடம் நிலவுகிறது.

ஆழிப்பேரலை நிவாரண சபை தமிழ்மக்களின் பிரச்சினையின் நுனியைக்கூடத் தொடவில்லை. ஆழிப்பேரலை நிவாரண சபையானது இடைக்கால நிர்வாக சபைக்கு பதிலாக முன்வைக்கப்பட்டதன்று. இடைக்கால நிர்வாக சபையானது பிரிவினைக்கு வழிவகுக்கும் எனக் கூறப்படுவதை நிராகரிக்கிறோம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொதுக்கட்டமைப்பு இறந்துபோய்விட்டது; சிவாஜிலிங்கம் பாராளுமன்றில் உரை

பொதுக்கட்டமைப்பு இறந்து போய்விட்டது. அதனைத் தகனம் செய்து பாலும் ஊற்றி விட்டோம். நீங்கள் இப்போதுதான் பிரேத பரிசோதனை செய்கின்றீர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் நேற்றுமுன் தினம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்மைப்பு விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்: இந்த பாராளுமன்றத்தில் காட்சிகள், கோலங்களை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் உடன்படிக்கை செய்து ஆட்சியமைத்து தேன்நிலவு அனுபவித்துக் கொண்டிருந்தன.

தற்போது பொதுக் கட்டமைப்பினால் அந்தத் தேன்நிலவு உறவு முடிவடைந்தது. ஜே.வி.பி பிரிந்து சென்று எதிர்க் கட்சியில் இருக்கிறது. இங்கு உரையாற்றிய அத்துரலியேதேரர் சொன்னார், தமிழர்கள் இந்த நாட்டில் முன்னர் வாழவில்லையாம் என்று அந்த தேரர் வரலாற்றை மூடி மறைக்கிறார்.

இங்கே இரண்டு இறைமை படைத்த அரசுகள் இருக்கின்றன. ஒன்று சிறிலங்கா அரசு, மற்றையது தமிழீழ அரசு. இதை சர்வதேச நாடுகள் தெரிந்து கொண்டுள்ளன எனத் தெரிவித்தார்.

## நண்பரின் அசிட் வீச்சில் இளைஞன் மரணம்

(கொழும்பு)

நீர்கொழும்பு இம்புகஸ்முல்ல திவுலப்பிட்டடியவில் அசிட் வீச்சு மற்றும் வாள்வெட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் மரணமாகியுள்ளார். வெதுப்பகத்தில் வேலை செய்த நண்பர்கள் இருவரிடையே நேற்று ஏற்பட்ட தகராறில் நித்திரையின் போது ஒருவர் மற்றயவரை இவ்வாறு கொலை செய்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. சந்தேகநபரைப் பொலிசார் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (32)

## தேர்தலை அறிவிக்கக்கோரும் மனு ஹெல உறுமயவால் வாபஸ்?

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் நடைபெறும் நாளை அறிவிக்கக் கோரி ஜாதிக ஹெல உறுமய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு வாபஸ் பெறப்படக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் தேர்தல் ஆணையாளர் பிரதி வாதியாக இருப்பதனால் தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிட முடியாத இக்கட்டான நிலையில் தேர்தல் ஆணையாளர் இருக்கின்றார். இந்த விடயத்தை முக்கிய அரசியல் கட்சிகள் ஜாதிக ஹெல உறுமயவிடம் சுட்டிக்காட்டியதை அடுத்து வழக்கை வாபஸ் பெறுவது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய தற்போது ஆலோசித்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது

## 24 பயணிகள் காயம்

பாணந்துறை இரத்தினபுரி மார்க்க வீதியில் நேற்று 42ஆம் கட்டையில் இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 24 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 15 பேர் மாணவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரிக் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதேவேளை ஹபரணையில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த வீதி விபத்தில் ஒரு சிறுமி கொல்லப்பட்டார்.

# சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி யின் ஆதரவைப்பெற

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பகீரதப் பிரயத்தனம்

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தலில் ஜே.வி.பி யினரின் ஆதரவைப் பெறும் கடும் பிரயத்தனத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார். கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் ஜே.வி.பி யின் பிரதிநிதிகளைச் சந்தித்து இவ் விடயம் குறித்து பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையில் ஜே.வி.பி யின்பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் ரத்னாயக்க, அநுரகுமார திசநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதமருடன் அமைச்சர்களான மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

பொதுக் கட்டமைப்பினை முற்றாக நிராகரிக்கப் பிரதமர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் சமாதான முயற்சி தொடர்பான நிலைப்பாடு தொடர்பில் பிரதமர் தனது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும். அப்படியானால் தான் சனாதிபதித்தேர்தலில் ஆதரவு வழங்குவது குறித்து சிந்திக்க முடியும் என ஜே.வி.பி யின் பிரதிநிதிகள் இந்தப் பேச்சுவார்த்தையில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புதுக்குடியிருப்பில் வீதி விபத்து

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; சம்பவதினம் மாலை முத்துஜயன்கட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிளில் தாய், தந்தையும் இவர்களது மூன்று பிள்ளைகளும் சென்றுகொண்டிருக்கையில் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் மாலை மூன்று மணிக்கு மோட்டார் சைக்கிளின் ரயர் வெடித்து விபத்துக்குள்ளானதில் முத்துஜயன்கட்டைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான வா.பகீரதி (வயது-29) என்பவர் படுகாயமடைந்தார். இவரது பிள்ளைகளான ஒன்பது வயதான யேசுதன், எட்டு வயதான யேயதர்சன் ஆகியோர் சிறுசிறு காயங்களுக்குள்ளாகினர்.மூன்று வயதான ஜெனிதா எனும் சிறுமி காயம் ஏதுமின்றித் தப்பிக்கொண்டார். காய மடைந்த இவர்கள் புதுக்குடியிருப்புவைத்தியசாலையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# நேர்முகப் பரீட்சைக்கு மீண்டும் சந்தர்ப்பம்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தமிழ், சிங்கள மொழிமூலப்பட்டதாரிகளை ஆசிரியர்களாகவும்,திட்டமிடல் நிதி உதவியாளர்களாகவும் நியமிப்பதற்காக ஓகஸ்ட் 04 தொடக்கம் ஓகஸ்ட் 10 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா தெற்கு,கல்முனை மட்டக்களப்பு, ஆகிய இடங்களிலுள்ள வலயக்கல்விப் பணிமனைகளில் நடத்தப்பட்ட நேர்முகத் பரீட்சைகளிற்கு தோற்றத்தவறியவர் களிற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இவர்களுக்காக திருகோணமலையில் மாகாணக்கல்வி அமைச்சில், ஓகஸ்ட் 13 ஆம் திகதி சனிக்கிழமையும், ஓகஸ்ட் 15 ஆம் திகதி திங்கட்கிழமையும் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கல்வி அமைச்சினால் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் இடம்பெற்று, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் மாத்திரமே இன்றும், நாளை மறுதினம் (திங்கட்கிழமையும்) நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு வர வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

மொத்தமாக 4964 தமிழ் மொழி மூலப் பட்டதாரிகளும், 602 சிங்கள மொழி மூலப்பட்டதாரிகளும் கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற பட்டியலின்படி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 1864 தமிழ் மொழிமூலப்பட்டதாரிகளும், 504 சிங்களமொழிமூலப் பட்டதாரிகளும் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர். அத்துடன் திட்டமிடல்-நிதியுதவியாளர்களாக 629 தமிழ் மொழி மூலப் பட்டதாரிகளும் 98 சிங்கள மொழிமூலப்பட்ட தாரிகளும் நியமிக்கப்படவுள்ளனர். (25)

# பொதுசன ஐ.மு.தலைவர்களுடன் சனாதிபதித்தேர்தல் குறித்து பிரதமர் பேச்சு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பொதுசன ஐக்கிய முன்னணியின் கட்சித் தலைவர்கள் எதிர்காலத் தேர்தல்கள் குறித்தும் அரசியல் நிலவரம் குறித்தும் பிரதமருடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன, லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. டபிள்யூ, குணசேகர, கூட்டணி அரசின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த, ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் நாட்களில் ஏனைய முற்போக்கு முன்னணிகளுடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இச்சந்திப்பின்போது எதிர்வரும்சனாதிபதித் தேர்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

# சம்பூரில் கடுங்காற்றுடன் பனிக்கட்டி மழை பொழிவு!

திருமலை மாவட்டம் சம்பூரின் கரையோரப் பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் கடுமையான காற்று வீசியதுடன், பனிக்கட்டி மழையும் பொழிந்துள்ளது. செங்கல் அளவிலான பனிக்கட்டிகள் இதன்போது தொடர்ச்சியாக வீழ்ந்ததாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.கடுமையான காற்று வடக்கு நோக்கி பத்து நிமிடங்களும், தெற்கு நோக்கி ஐந்து நிமிடங்களும் வீசியுள்ளது.

இதன்போது வீடுகள் பலவற்றின் கூரைகள் சேதமடைந்துள்ளதுடன், பல மரங்கள், தெலைபேசிக் கம்பங்கள் என முறிந்து வீழ்ந்துள்ளன. விடுதலைப் புலிகளின் காரியாலயத்திற்கும் கஜமுகன் வித்தியாலயத்திற்கும் அருகிலிருந்த பாரிய ஆலமரம்வேரோடு சாய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவத்தின்போது வீதியால் சென்றுகொண்டிருந்த ஒருவர் மீது மின்னல் தாக்கியதாகவும், அதனால் அவரின் உடல் கருகியுள்ளதாகவும் அவர் சம்பூரிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கூனித் தீவு கஜமுகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சிப்பாய் காயம்

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் ஊர்காவல்படைவீரர் ஒருவரின் துப்பாக்கி வெடித்ததில் மற்றொரு ஊர்காவல் படையாளி காயம் அடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவவுனியா பொலிசார்தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை 7.30 மணியளவில் வாகனத்தில் செல்லும்போது இந்தச்சம்பவம் இடம்பெற்றிருப்பதாக வவுனியாப்பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# திருமலை நகர சபை எல்லைக்குள் சட்டவிரோத ஆலயங்களை அகற்றுக

-திருமலை நகரசபை அறிவிப்பு

திருகோணமலை நகரசபை தனது எல்லைக்குட்பட்ட பகுதியினுள் சட்ட விரோதமாக அனுமதியின்றி அமைக்கப்பட்ட சகல ஆலயங்களையும் அகற்றுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இதற்காக ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனை அகற்றாது விடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 15 ஆம் திகதி பேருந்து தரிப்பிடத்தில் சட்டவிராதமாக இரவு வேளையில் புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். நகரில் ஐந்து தினங்கள் போராட்டங்கள் நடைபெற்றன. சனாதிபதியின் வேண்டுதலுக்கு அமைவாக தமிழ் மக்கள் பேரவை மேற்கொண்ட எதிர்ப்புப் போராட்டங்கள் கைவிடப்பட்டன. இப் புத்தர் சிலை அகற்றப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் தன்னால் எடுக்கப்படுமென அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்காக மூன்று தடவைகள் அமைச்சர்குழு ஒன்றினை திருகோணமலைக்கு அனுப்பி தமிழ் மக்கள் பேரவையுடன் பேச்சுக் களை நடத்தியமை குறிப்பிடத் தக்கது.

# மட்டு . சென்ற பேருந்துகள் மீது சிங்களக்காடையர் தாக்குதல்

## – பயணிகள் பலர் காயம் பேருந்துகள் சேதம்

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச்சென்ற தனியார் பேருந்துகள் மீது சிங்களக்காடையர்கள் நேற்று அதிகாலை மேற்கொண்ட தாக்குதலின்போது சில பயணிகள் காயமடைந்துள்ளார்கள். ஐந்து பேருந்துகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து மோதியதில் அப்பிரதேச யுவதியொருவர் உயிரிழந்திருந்தார்.

இச்சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த அந்த கிராமவாசிகள் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச்செல்லும் தனியார் பேருந்துகளின் வரவை எதிர்பார்த்து காத்திருந்து இந்த தாக்குதலை நடத்தியுள்ளார்கள்.

# மருதங்கேணி இ.த.க பாடசாலையில் தமிழீழ வரலாற்றுக் கண்காட்சி

நேற்றுக்காலை 11.00 மணியளவில் நிதித்துறையைச் சேர்ந்த கி.தாயகன் தலைமையில் யா/மருதங்கேணி இ.த.க பாடசாலையில் தமிழீழ வரலாற்றுக் கண்காட்சிஆரம்பமானது. இதில் மங்கலவிளக்கினை மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் ,யா/மருதங்கேணி இ.த.க பாடசாலை அதிபர் மா.நவநீதமணி, மருதங்கேணி கோட்ட கல்விக்கழகப்பொறுப்பாளர் அண்ணாத்துரை ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ கடற்படையின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறை பொறுப்பாளர் அ.நிலவன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து கண்காட்சி மண்ட பத்தினை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கசமாசமேலாளர் மோகன் திறந்து வைத்தார். இக்கண்காட்சியில், தமிழரின்தொன்மை வரலாறு, அகழ்வுச்சான்றுகள், போராட்டவரலாறு., சிறிலங்கா இந்தியப்படைகளின் படுகொலைகள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் போன்றன இடம் பெறுகின்றன. நேற்றுத் தொடக்கம் நடைபெறுகின்ற இக்கண்காட்சியை மாணவர்கள்,ஆசிரியர்கள், பொதுமக்கள், போராளிகள் எனப்பலரும் பார்த்துப் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது.

### படு.....

மட்டு. மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் ஸ்ரீன்ஜோர் ஜென்சனும் கலந்துகொண்டார். விடுதலைப் புலிகளின் சார்பில் இளந்திரையனுடன் மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் செல்வா, நகரப் பொறுப்பாளர் அன்புமாறன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் பின்னர் கருத்து தெரிவித்த ஹொக்லண்ட், சந்திப்பானது மிகவும் திருப்திகரமானதாக இருந்தது. சந்திப்பில் பல விடயங்கள் குறித்து ஆராய்ந்தோம். இதேபோல் இராணுவம், படையினர், பொலிசாரையும் சந்தித்துப் பேசவுள்ளோம். இரு தரப்பினரையும் சந்தித்துப் பேசி சுமுகமான நிலையினை உருவாக்க நாம் முயல்கின்றோம் என்று தெரிவித்தார்.

சந்திப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன்; மாவட்டத்தில் நடைபெறும் போராளிகள் மீதான தாக்குதல்கள் குறித்தும் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு எடுத்துக் கூறினோம். மீண்டும் யுத்தம் தொடங்குவதென்பதும், சமாதானம் நிலவுவது என்பதும் மக்களின் கைகளிலே தங்கியுள்ளது என்பதையும் அவரிடம் தெளிவுபடுத்தியுள்ளோம் என்று கூறினார்.

### படையினரின்...

தில் அமைந்துள்ள இவ் விசேட அதிரடிப்படை முகாமிலிருந்த நீர்த்தாங்கி வாகனம் வழமையாக சங்கமம் கிராமம்,கழகொலக்கிராமம் ஆகியவற்றிற்கு நீர்விநியோகம் செய்வதாக அப்பகுதியினர் தெரிவிக்கின்றனர். பொலிசார் இத்தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சு.கட்சி....

வாகனத்தில் சென்று துப்பாக்கிச் சூட்டை நடத்தி தப்பிச் சென்ற சந்தேக நபர்களைக் கண்டு பிடிக்கும் விசாரணையை கொட்டாஞ்சேனை பொலிசார் ஆரம்பித்துள்ளனர்.

(32)

### சிறிலங்கா.....

பது தொடர்பில் இந்த ஒத்திகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் ஒத்திகை நேரத்தில் திருகோணமலை மக்கள் அச்சப்பட்டு அல்லோல கல்லோலப்பட்டனர். ஏனெனில்,ஒத்திகையின் போது கனரக ஆயுத தளபாடங்கள் பயன்டுத்துப்பட்டதால்,இதன்போது எழுந்த வெடியோசைகள் திருமலை நகரத்தை கலங்கச் செய்திருந்தது. இவ்வொத்திகையின் போது விமானப் படை விமான்ங்களும் பயன்படுத்தப் பட்டதாகவும் இதில் முப்படையினரும் கலந்து கொண்டதாகவும் எமது திருமலைச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

### இனந்தெரியாதோரின்....

சட்டவிரோதமான முறையில் சில நபர்கள் மண் எடுப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து நுவரகல சிறிலங்கா பொலிஸ் நிலையத்திலிருந்து அந்த இடத்திற்குச் சென்ற பொலிசார் மீது இந்தத் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேசத்தில் நேற்று நண்பகல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சிறிலங்காப் பொலிசார் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊர்காவல் படை வீரரான மொகமட் பாரூக் என்பவர் காயமடைந்துள்ளார்.

சம்மாந்துறை சிறிலங்கா பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரண்டு பொலிசாரும், காயமடைந்த ஊர்காவல்படைவீரரும் வழமை போல் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் வெட்டு வாய்க்கால் பாலத்திற்கு அருகாமையில் மறைந்திருந்த நபர்கள் இந்தத் துப்பாக்கிப்பிரயோகத்தை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.